Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 07 செவ்வாய்க்கிழமை (23.10.2012) பக்கங்கள் 20 ஓசை - 023

விஷானி நகை மாளிகை




மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


0212219510 (C/1675)











# மக்களின் வயிற்றில் அடிக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



(கொழும்பு)

அரசின் செயற்றிட்டங்கள் மூலம் வடக்கின் வறிய மக்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தடுத்து நிறுத்துகின்றனர் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திவிநெகும சட்டமூலத்துக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் தடையாக அமைந்தால் அது தொடர்பில் பொதுமக்கள் உரிய தீர்வை வழங்குவார்கள். அவசியம் ஏற்பட்டால் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பொது மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்படும். எனவும் அமைச்சர் பசில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இடியுடன் மழை

நாட்டின் சகல பாகங்களிலும் நேற்று மாலை 2.00 மணியுடன் ஆரம்பித்த மழை 48 மணித்தியாலயங்களுக்கு இடி, மின்னலுடன் பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் மழை அதிகம் பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எச்.காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மழையுடன் மின்னல் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதால் பொது மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## உற்சாகத்துடன் மீள்குடியமர்வு மாதகல் மேற்கில் நேற்று வைபவம்

(யாழ்ப்பாணம்)

இருபது வருடங்களின் பின்னர் மாதகல் மேற்குப் பகுதி மகக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு இப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். 20 வருடங்களின் பின்னர் நேற்று முதல் மீள்குடியமர்ந்துள்ளனர். 256 குடும்பங்கள் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் நேற்று வரை 212 குடும்பங்கள் மீள்குடியமரத் தமது பதிவுகளை மேற்கொண்டு

19 ஆம் பக்கம் பார்க்க



## படைமுகாம் அமைக்க சீன அரசு உதவுகிறது

### ஐ.நா.வில் முறையிடுவோம் என்கிறார் மாவை

சீனாவின் உதவியுடன் யாழில் இராணுவத்தினர் மக்களின் நிலங்களில் படை முகாம்களை அமைத்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். யாழ். நல்லூர் பிரதேச சபைக்கு முன்னால் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இரு பிரதேச சபைகள் மீது வழக்கு கட்டட ஒப்பந்தகாரர் கடுப்பு

உள்ளூராட்சி மன்றங்களின் அசிரத்தையான செயற்பாட்டினால் வலி. தெற்கு உடுவில் மற்றும் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் ஆகிய இரு பிரதேச சபைகளின் மீதும் ஒப்பந்தகாரர்கள் வழக்குத் தாக்கல் செய்ய ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இதன் முதல் கட்டமாக சட்டத்தரணி மூலம் கடிதம் மூலமான கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் புதிய கட்டடத்தைக் கையேற்பதில் உள்ளூராட்சி அமைச்சுக்கும் உரிய பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கும் இடையே முரண்பட்ட நிலைமை காணப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக தற்போது கட்டடம் கட்டியவர்களுக்கான இறுதிக்கட்டக் கொடுப்பனவை வழங்குவதில் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் பிரதிச்செயலாளர் உரிய கொடுப்பனவை விடுவிக்காது இழுத்தடித்து வருவதாகப் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே பிரதேச சபைகள் குறிப்பிட்ட நிதியை விடுவிப்பதற்கு வசதியாக உரிய பற்றுச்சீட்டுக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## "திவிநெகும" நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார, அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியாக 'திவிநெகும' நான்காம் கட்ட வேலைத் திட்டத்தின் விதை பொருட்கள் மற்றும் மரக்கன்றுகள் வழங்குமநிகழ்வு நேற்றுக் கா்லை 9.30 மணிக்கு யாழ். மாவட்டத்திலும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை மாவட்டத்தின் அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குக் கிராமத்தின் அரசியல் மற்றும் மதப் பெரியார்கள் முன்னிலையில் கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அலுவலர்களினால் விதைபொருட்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இவ்விதை பொருட்கள் வழங்கலானது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதால் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஆர்வமுள்ள பயனாளிகள் தமது பிரிவு கிராம அலுவலர்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அரசை தனிமைப்படுத்தக் கூடாது



(கொழும்பு)

சர்வதேச அரங்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அரசையும் தனிமைப்படுத்தப்படுவதை ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி முற்றாக எதிர்த்தார் என்று விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

நோர்வேக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள குறிப்பிடப்பட்டுள்ளன. நாடாளுமன்றத் தெரிவுக் குழு தீர்வுத்

19 ஆம் பக்கம் பார்க்க

இணையத்தில் தினமுரசு

www.thinamurasu.net

## மாகாண எல்லைகளை மாற்ற அரசு முயற்சிக்கிறது

### சாடுகிறார் மனோகணேசன்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் இல்லாது ஒழித்து, நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களின் எல்லைகளை யும் மீளமைத்து ஐந்து மாகாணங்களாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் இரகசிய திட்டம் தீட்டியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பது தொடர்பில் சில அரசு சார்பு

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய வீடமைப்பில் முறைகேடு மன்னார் மக்கள் கொதிப்பு



(மன்னார்)

இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக மன்னார் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தை, எள்ளுப்பிட்டி திருக்கேதீச்சரம் ஆகிய கிராமங்கள் மன்/86 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டது. இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்திய வீட்டுத் திட்டம் 36 குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த 36 குடும்பங்களை மன்னார் பிரதேச செயலகமே தேர்ந்தெடுத்தது.

இத்தெரிவில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மன்/86 பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலரின் கையொப்பம் இல்லாமல் வேறு கிராம அலுவலரால் கையொப்பம் இடப்பட்டு சிபார்சு செய்யப்பட்டமை ஏன் என்றும்,

வீடு உள்ளவர்களுக்கும் இத்திட்டத்தின் ஊடாக வீடு வழங்கப்பட்டன என்றும்,

அரச ஊழியர்களில் 25 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர்கள் தெரிவு செய்யப்பட்டமை ஏன் என்றும், கணவன், மனைவி இருவரும் அரச ஊழியர்களாக இருப்பவர்களுக்கு வழங்கப்பட்டமை எந்த வகையில் நியாயம் என்றும், உரிமம் இல்லாத காணியில் தற்காலிகமாக வசித்தவர்களுக்கு வீடு வழங்கப்பட்டமை ஏன் என்றும், கணவனை இழந்தவர் பொய்யான தகவல்களின் படி புள்ளி வழங்கப்பட்டு வீடு கொடுக்கப்பட்டமை ஏன் என்றும், தெரிவுக்குழுவில் உள்ள அரச ஊழியர்களின் நெருங்கிய உறவுமுறையானவர்களுக்கு வீடு வழங்கப்பட்டமை குறித்தும் அப்பகுதி மக்கள் கொதிப்படைந்து கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்திடமும் பல முறை முறையிட்டும் பயனற்றுப் போய்விட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலகமே பயனாளிகள் தெரிவுக்குப் பொறுப்பு என செஞ்சிலுவைச் சங்கத்தினர் கூறியுள்ளனர் எனவும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் புலமைப்பரிசில் வெகுமதிகள்

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குப் பெறுமதிமிக்க வெகுமதிகள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் வழங்கப்படவுள்ளது.

இதன் கீழ் 5 ஆயிரம் பேருக்கு ஒவ்வொருவருக்கும் தலா 15 ஆயி ரம் ரூபா பெறுமதிமிக்க வெகு மதிகள் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதியிலிருந்து நவம்பர் 30ஆம் திகதி வரை யாழ்.மாட்டீன் வீதியில் அமைந்துள்ள ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அலுவலகத்திற்குச் சமூகமளித்து பெறுவதன் மூலமும் அல்லது www.etfb.lk என்ற இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் புலமைப்பரிசில் அலுவலர், புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, இல.92, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய, கொழும்பு -05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# வவுனியாவில் சமுர்த்தி எழுச்சி வர்த்தகக் கண்காட்சி



உற்பத்திப் பொருட்களுக்கான கண்காட்சியும், சமுர்த்திப் பயனாளிகளின் சந்தையும் இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட சமுர்த்தி மகா சங்கங்கள் இணைந்து நடத்தும் 'திவிநெகுமவிற்கு சமுர்த்தி சக்தி' எனும் கருப்பொருளில் சமுர்த்தி எழுச்சி வர்த்தகக் கண்காட்சி நேற்று வவுனியா சமுர்த்தி மகா சங்க கட்டடத்தில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர் பந்துல கரிச்சந்திர, செட்டிகுளம் பிரதேச செயலர் என்.கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலர் எம்.எஸ். ஜானக, மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் எஸ்.சபாலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது உள்ளூர்

# ஆசிரியர்கள் விருப்பத்திற்கு மாறான இடமாற்றங்கள் கல்வி அபிவிருத்தி அல்ல

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் காட்டமாக தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெறாத அளவிற்கு வடமாகாணத்தில் அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் பாடசாலைச் சமூகம், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக நடைபெறுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மிகவும் காட்டமாக அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

யுத்தச் சூழ்நிலைகளிலும், இடப்பெயர்வுகளிலும் இருந்து வடமாகாணம் இப்போதுதான் விடுபட்டுக்கொண்டிருக்கின்றது. இதைவிட இன்னும் பல பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்கமுடியாமல் உள்ளன. இந்நிலைமையில் தேசியக் கொள்கைகள் என்று சொல்லிக் கொண்டு பாடசாலைகளின் கட்டுக்கோப்புக்களை முற்றாகக் குழப்பி இடமாற்றம் என்ற பெயரில் புனிதமான தொழிலில் வெறுப்பை ஏற்படுத்தி வகைதொகையில்லாமல் ஒரே பாடசாலையில் இருந்து பல ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் கல்வியில் அபிவிருத்தியைக் காணமுடியாது. இதற்காக ஆசிரியர் சம்பந்தமில்லாத அரசியல் கட்சிகளிடமும், அதிகாரிகளிடமும் அலைந்து திரியும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

வலிகாமம் பிரதேசத்தில் தற்போது நடைமுறைப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றப் பட்டியலில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டறிந்து அந்த வலயத்தில் உள்ள அனைத்து அதிபர்களையும், ஆசிரியர்களையும் நேற்று முன்தினம் அழைத்துக் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியது.

அதில் ஒரே பாடசாலையில் இருந்து பத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும், வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்கு அவர்கள் கோராத தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும், பாடசாலைகளின் கட்டுக்கோப்புக்களை முற்றாகச் சீர்குலைக்கும் நிலையில் பாடசாலை முகாமைக்குழுவில் இருக்கும் அனைவரையும் ஒட்டுமொத்தமாக இடமாற்றம் செய்யவுள்ளதாகவும், ஏற்கனவே வன்னிப் பிரதேசப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடத்திற்கு பதிலாசிரியர்களை வழங்காமலும் உள்ளதனைச் சுட்டிக்காட்டி ஒட்டுமொத்தமாக இந்த இடமாற்றமானது ஒரு சிலரின் திருப்திக்காக மட்டும் செய்யப்படுவதாக ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதைவிடக் கலந்து கொண்ட ஆசிரியைகளில் பலர் இந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படுமானால் தாம் முன் கூட்டியே ஓய்வுக்குச் செல்லவுள்ளதாகவும் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறான நெருக்கடி நிலைகளுக்கு அதிபர்கள் முகங்கொடுக்க முடியாமல் இருப்பதனால் பாடசாலைத் திறப்புக்களை அலுவலகத்தில் கொண்டு ஒப்படைத்துவிட்டுத் தாம் ஒதுங்கிக்கொள்ளவுள்ளதாகவும் பல அதிபர்கள் கருத்து வெளியிட்டனர்.

இது தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் சங்கத்தின் பொதுச் செயலாளர் தொடர்புகொண்டு நிலைமைகளைத் தெளிவுபடுத்தி உடனடியாக இவற்றை நிறுத்தி வட மாகாணத்திற்கு என்று சில நடைமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளிநாடு சென்றுள்ள செயலாளர் வருகைதரும் வரை ஏழு வருடத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்தி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வடமாகாண சபையின் கீழ் இயங்கும் அமைச்சின் திணைக்கள 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பாதீடு தயாரித்தல் சம்பந்தமான கலந்துரையாடல் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், நிதியமைச்சின் செயலாளர் மகேந்திரன் உட்பட அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கணக்காளர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

படம் : கே.நந்தகுமார்.

# விவசாயிகளுக்கு செலவு குறைந்த வேதாள வெங்காயச்செய்கை சிறந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் வெங்காய விதையைப் பயன்படுத்தி நாற்று மூலம் வேதாள வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் வெங்காயச் செய்கைக்கான உற்பத்திச் செலவை 50 வீதத்தால் குறைப்பதோடு தரமான நல்ல அறுவடையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று யாழ் மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான அபிவிருத்தி அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் வெங்காயச் செய்கை விதை வெங்காயக் குமிழ்களைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த வருடம் உண்மை வெங்காய விதையைக் கொண்டு உருவாக்கப்பட்ட நாற்றுக்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. வெங்காய விதை மூலம் உருவாக்கப்படும் நாற்றும் 40 தினங்கள் மேடையில் பராமரிக்கப்பட்டு பிடுங்கி, பண்படுத்தப்பட்ட தோட்டத்தில் மேடையிலோ பாத்தியிலோ நடுகை செய்யப்பட்டு 70 தினங்கள் நீர் பாய்ச்சப்பட்டு பராமரிக்கப்படும். பின்னர் அறுவடை செய்யலாம்.

இதன் மூலம் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகாத தரமான விளைச்சல் கூடிய வெங்காயத்தை அறுவடை செய்யலாம். வெங்காயக் குமிழ் மூலம் செய்கை பண்ணப்படும் ஒரு கிலோ வெங்காயத்துக்கான உற்பத்திச் செலவு 32 ரூபாவுக்கு மேற்பட்டதாக இருக்கும். அதே வேளை விதை மூலம் செய்கை பண்ணப்படும் வெங்காயத்தின் உற்பத்திச் செலவு ஒரு கிலோவுக்கு 18 ரூபாவுக்கு உட்பட்டதாக இருக்கலாம்.

40 கிராம் வெங்காய விதையைப் பயன்படுத்தி அமைகக்கப்படும் நாற்று மேடையில் இருந்து பெறப்படும் நாற்று மூலம் ஆயிரம் கன்று மூன்றரைப் பரப்பு தோட்ட நிலத்தில் பயிரிடலாம்.வெங்காய விதையும் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வெங்காயம் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்கி வெங்காய விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ வெங்காய விதையின் விற்பனை விலை 12 ஆயிரம் ரூபா. நல்ல முளை திறன் கொண்ட வெங்காய விதை உற்பத்தி செய்யப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் உற்பத்திக் கால நிலைக்கு ஏற்புடையது.

விதை மூலம் வெங்காயச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## உடையார்கட்டில் வாழைச்செய்கை


(உடையார்கட்டு)

உடையார்கட்டுப் பகுதியில் வாழைச்செய்கையில் விவசாயிகள் தீவிரஅக்கறை காட்டிவருகின்றனர். இடப்பெயர்வின் பின்னர் கடந்த வருடம் இப்பகுதியில் பொதுமக்கள் மீள்குடியேற்றப்பட்டிருந்தனர். இப்பகுதியில் இருந்த வாழைத்தோட்டங்கள் முற்றாக அழிவடைந்த நிலையில் தற்போது வாழைச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருந்து வாழைக் குட்டிகள் எடுத்துவரப்பட்டு விவ சாயிகள் இச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த உற்பதிக்கான உதவிகளையும் நிறுவனங்களிடம் இருந்து இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார மேம்பாட்டு பயிற்சிமுகாம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினால் 12 கல்வி வலயங்களி லிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட தரம் - 10,12 மாணவர்களுக்கான சுகாதார மேம்பாட்டு வதிவிடப்பயிற்சிமுகாம் கடந்த 19, 20 ஆகிய தினங்களில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் சுமார் 90 மாணவர்கள் கலந்து கொண்டனர். பாடசாலைகளில் சுகாதாரக்கழகங்களைப் புதுப்பித்தலும் பாடசாலை மாணவர்களிடையே சுகாதாரப்பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி இதனூடாக சுகாதார மேம்பாட்டை அதிகரிப்பதும் இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும்.

இதில் வளவாளர்களாக டாக்டர் வி.யோகேஸ்வரன், டாக்டர் ஆர்.சுரேந்திரகுமார், பொதுச்சுகாதா பரிசோதகர் ஜே.உமாசுதன், பாடசாலை சுகாதாரக்கல்வி அதிகாரி எஸ்.பிரணவன், துணுக்காய் கல்வி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பி.சசிகரன் தீவக கல்வி வலய விஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பி.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செட்டிகுளத்தில் வாணிவிழா

(வவுனியா)

செட்டிகுளம் மகாவித்தயாலயத்தின் வாணி விழா நிகழ்வு இன்றும் நாளை மற்றும் நாளை மறுதினமும் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தர்மரட்ணம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் அன்ரன் சோமராஜா, சிறப்பு விருந்தினர்களாக செட்டிகுளம் கோட்டக்கல்விப்பணிப்பாளர் கே.நித்தியானந்தம் மற்றும் வவுனியா தெற்குவலய பொறியியலாளர் கே.சிவகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் விஜயதசமி பூஜையும் ஏடு தொடக்கமும் இடம்பெறவுள்ளன. மூன்றாம் நாள் நிகழ்வு வியாழக்கிழமை காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா அரசாங்க அதிபர் எம். கே. பந்துலகரிச்சந்திர, கௌரவ விருந்தினராக வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் என். கமலதாசன், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம். அருள்நாயகம், பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ். கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (160)

# மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு

(வரணி)

வடக்கு வரணியில் இருந்து கொடிகாமம் நோக்கி பயணித்த பெண்ணின் தாலிக் கொடியை மோட்டார் சைக்கிளில் சென்ற திருடர்கள அறுத்துச் சென்றுள்ளனர். எருவன் விநாயகப் பெருமான் ஆலயத்தருகில் கணவனும் அவரது மனைவியும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தகவல் தருகையில், ஆட்களற்ற பிரதேசத்தில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது. திடீர் என முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் திருடர்கள் பின்பகுதியில் இருந்த மனைவியின் கழுத்தில் அதிவேகத்தில் கையைவைத்து தாலிக்கொடியை அறுத்துள்ளனர். இது தொடர்பாக கொடிகாமம் பகுதி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிவித்தனர். (150)

# உரிமை கோரப்படாத கால்நடைகள் ஏலம்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் கட்டாக காலிகளாக அலைந்து திரிந்த கால்நடைகள் பிடிக்கப்பட்டுள்ளன. இது வரை உரிமை கோரப்படாத கால்நடைகள் சாவகச்சேரி பிரதேச சபையினரால் கடந்த வெள்ளிக்கிழமை இடைக்குறிச்சி கடத்தனைச் சந்தியில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட்டது.

மேலும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டுப்பத்துமாறும் தவறும் பட்சத்தில் மாடு ஒன்றுக்கு 1000 ரூபா குற்றப்பணமாகவும் பராமரிப்புக்கு நாளொன்றுக்கு 100 ரூபாவும் ஆடு ஒன்றுக்கு 250 ரூபா குற்றப்பணமாகவும் பராமரிப்புக்கு ஒரு நாளைக்கு 50 ரூபாவும் அறவிடப்படும் எனவும் அறிவித்திருந்தனர்.

இது தொடர்பில் அந்தப் அந்த பிரிவு கமநல சேவையினரும் பொது மக்களுக்கு அறிவித்திருந்தனர். இந்த நிலையிலே தான் பிடிக்கப்பட்ட கால்நடைகளை எவரும் உரிமை கோரதால் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையினரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. (150)

## தென்னம்பிள்ளைக்குத் தட்டுப்பாடு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு ரெட்பானா பகுதிகளில் தென்னம்பிள்ளைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தென்னந்தோடங்கள் அழிவடைந்த நிலையில் மீள்செய்கையில் இப்பகுதிமக்கள் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் தமக்குத் தேவையான தென்னம்பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதில் இவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

தென்னை அபிவிருத்தி சபையிடமிருந்து தமக்கான உதவிகளை இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.



கைதடி சரஸ்வதி இளைஞர் கழகத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட முதியோர் கௌரவிப்பு, விளையாட்டு விழா நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தென்மராட்சி பிரதேச அதிகாரி உதயமோகன் முதியவர் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும், முதியவர்களின் போட்டி நிகழ்வுகளையும் காணலாம்.
(படம்: அ.அனித்தா)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சீமான் வருகைக்கு காத்திருப்போம்!

நாம் தமிழர் கட்சித் தலைவரும் சினிமா இயக்குனர் மற்றும் நடிகருமான செபஸ்ரியன் சீமோன் எனப்படுகிற சீமான் கடைசியில் ஈழ மக்களுக்கு ஒரு நற்செய்தியை அறிவித்திருக்கிறார். 2016–ல் ஈழத்தில் ஒரு புதிய வரலாறு படைக்கப்படும் என்று உறுதிபட அவர் தெரிவித்திருக்கிறார். நாம் தமிழர் கட்சியின் பொதுக் கூட்டம் புதுக்கோட்டையில் நடந்தபோது, அங்கு உரையாற்றிய சீமான், இலங்கை அரசுக்கு இந்தக் காலக்கெடுவை விதித்தார்.

தனது உயிர் போவதற்குள் நமக்குத் தமிழீழத்தைப் பெற்றுத் தந்துவிடுவதாக சில மாதங்களுக்கு முன்னர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி சூளுரைத்தபோது, நமக்குக் குழப்பமாகவே இருந்தது. என்ன இருந்தாலும் இந்த முதியவர் தான் சாகும் நாளை எண்ணி நம்மைக் காத்திருக்க வைத்து விட்டாரே என்று கவலையாகவும் இருந்தது. அவரது முயற்சியால் தனிநாடு கிடைக்க எத்தனை வருடங்களாகும் என்ற கணக்குச் சரியாகத் தெரியாமலும் இருந்தது.

ஆனால், சீறும் தமிழன் சீமான் அப்படி நமக்குக் குழப்பம் தரக்கூடிய காலக்கெடுவைச் சொல்லவில்லை. தி.மு.க. தலைவரைப் போலவோ அல்லது சிங்கள அரசுக்கு சிம்மசொப்பனமாய் உலாவரும் நமது வீரவசனத் தமிழரசுத் தலைவர்க்ளைப் போலவோ அவர் நம்மைச் சந்தேகத்தில் விடவில்லை.

நமது மக்களின் எல்லாத் துன்பங்களும் தீர்ந்து இயல்பு வர்ழ்க்கைக்கு மீள எத்தனை ஆண்டு காலம் காத்திருப்பது என்ற கேள்விக்கே இடமில்லாமல் 2016 ஆம் ஆண்டில் “எல்லாம் சரிவரும்” என்று திறுதட்டமான ஒரு ஆண்டைச் சொல்லி அவர் ஒரு நெருப்புத் தமிழன்தான் என்பதை நிரூபித்திருக்கிறார். சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல் ஏமாற்றுவதற்கு இது ஒன்றும் நடிகை விஜயலட்சுமி விவகாரமல்ல; வீரத்தமிழ் வாழ்க்கை என்பதை அவர் அறியாதவரல்ல.

ஈழத்தமிழ்ப் பெண்ணுக்கு வாழ்வளிப்பதற்காக விஜயலட்சுமியையே உதறியெறிந்த வீரத்தமிழனை நம்பி நாலே நாலு ஆண்டுக்ள் நாம் காத்திருக்க முடியாதா? 2016 கூட்டுத்தொகை 9 ஆக வருவதால், சீமான் எழுச்சிப்படையுடன் ஈழம் வந்திறங்குவதற்கு நன்கு திட்டமிட்டே வெற்றி எண்ணாக வரும் ஒரு ஆண்டைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

பட்டதுதான் கஷ்டங்கள் பட்டுவிட்டோம். இன்னும் நாலே ஆண்டுகள் பல்லைக் கடித்துக்கொண்டு காத்திருந்தால்தான் என்னவாம்? வர்ப்போகும் நாலு மழைக்காலங்களையும் தறப்பாள்களின் கீழும் மரங்களின் கீழும் கால்வயிறோ அரைவயிறோ நிரப்பிக்கொண்டு படுத்தெழும்பி விட்டால் பிறகென்ன, செபஸ்ரியன் சீமோன் ஆட்சியில் பாலாறும் தேனாறுமாக நாங்கள் திளைத்துத் திக்குமுக்காட வேண்டியதுதான்!

தவிரவும், அப்படி ஒரு வீரத்தமிழனை நம்பி இன்னும் கொஞ்சக்காலம் கஷ்டப்படுவதை விட்டுவிட்டு அற்ப சலுகைகளுக்காக அரசாங்க எதிர்ப்பைக் கைவிட்டால், உலகெங்கும் உள்ள உண்மை மறத்தமிழர்கள் ஒருபோதும் நம்மை மன்னிக்க மாட்டார்கள். களத்தில் உள்ளவர்களெல்லாம் தனிநாட்டுக்கெதிரான துரோகிகள் என்று அறிவித்துவிட்டு, நாட்டுக்கு வெளியே இருப்பவர்கள்தான் அசல் தமிழர்கள்; அவர்கள் அமைக்கப்போவ்துதான் தமிழ் மாமனிதர்களின் அரசாங்கம் என்று சொல்லிவிடக் கூடும்.

நமக்கேன் வம்பு? சீமான் வருகைக்கு காத்திருப்போம்! காத்திருப்பு நமக்குப் புதிதல்லவே! - ஆசிரியர்

# மன்னாரில் கடும் மழை; வீடுகளுக்குள் வெள்ளம்

மன்னாரில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பெய்துவரும் கடும் மழையின் காரணமாக தற்போது மன்னாரின் பல இடங்களிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதோடு மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களின் பின் தற்போது மன்னாரில் கடும் மழை பெய்து வருகின்றது. மன்னாரில் உள்ள அனைத்து வீதிகளும் உயர்த்தப்பட்டு கொங்கிரீட் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளது.

கழிவுநீர் வாய்க்கால் எவையும் புதிதாக அமைக்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போது பெய்து வரும் கடும் மழையின் காரணமாக மழை நீரை தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றுவதில் மக்கள் பெரிதும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வீட்டு முற்றத்தை விட வீதிகள் உயரமான நிலையில் காணப்படுகின்றன. இதனால் மக்கள் தற்போது மழை நீரை வெளியேற்றுவதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மன்னாரிலும் டெங்குக்காய்ச்சல் அபாயம் ஏற்பட்டுள்ளமையினால் மழை நீரினால் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

தற்போது மழைநீர் வீதிகளிலும் தேங்கி நிற்கின்றது. இதனால் போக்குவரத்துக்களும் சில வீதிகளில் பாதிக்கப்பட்டுள்ளது.

எனினும் டெங்கு ஒழிப்பு வாரம் மன்னாரிலும் பிரகடனப்படுத்தி மன்னாரில் உள்ள வீடுகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள்,பொது இடங்கள் ஆகியவற்றில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த சிரமதானப்பணிகளில் மன்னார் பொலிஸார், மன்னார் நகர சபை, பிரதேச சபைகள், தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள் போன்றவை இணைந்து குறித்த சிரமதானப்பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வெள்ளவத்தை கடற்பரப்பில் உயிர் பாதுகாப்பு பிரிவு

வெள்ளவத்தை கடற்பரப்பில் மூழ்குவதால் ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கான விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த இலங்கை கரையோர பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, வெள்ளவத்தை கடற்பரப்பில் உயிர் பாதுகாப்பு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன புலகொடஆராச்சி தெரிவித்தார்.

# 13 ஆவது திருத்த சட்டத்தை நீக்கினால் மக்கள் கிளர்ந்தெழுவது திண்ணம்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரெட்ணம்

13 ஆவது திருத்தச்சட்டத்தை அகற்றுவதற்கு முற்பட்டால் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவது திண்ணமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான இரா.துரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தினை அகற்ற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என முன்வைக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் குறித்து நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சுதந்திரத்துக்குப்பின் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்குவதில் ஒரு ஆரம்பப்படியாக ஏற்படுத்தப்பட்டதே 13 ஆவது திருத்தச்சட்டமாகும். அதனை அரசியலமைப்பிலிருந்து இல்லாதொழிக்க சிறுபான்மையினராகிய எம்மால் அனுமதிக்க முடியாது.

எமது நாட்டில் இனவாத ஆட்சியாளர்களால் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அனைத்தும் கிழித்தெறியப்பட்டதே வரலாறாகும். இது அனைவராலும் அறியப்பட்ட விடயம். இதற்குக் காரணம் இலங்கைக்குள் சிங்கள தேசிய ஆட்சியாளர்களால் சர்வதேசத்தின் எந்த வித அனுசரணை, பார்வை, மேற்பார்வை கண்காணிப்பு எது வும் இல்லாது ஏற்படுத்தப்பட்டமையே ஆகும்.

இது மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் அல்லது பிரச்சினையில் எந்த விதமான தீர்வையும் வழங் கக்கூடாது என்பதுமே காரணமாகும்.

எம்மைப் பொறுத்தவரையில், பல ஒப்பந்தங்களால் ஏமாற்றப்பட்டு விரக்தியின் விளிம்பில், தமிழ் மக்கள் இருக்கின்ற ஒரு சர்வதேசத்தின் பார்வையுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்பட்டால் கொஞ்சமாவது செயற்படுகின்ற மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட்டு விடும்.

இதனால் வட, கிழக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்கள் ஊடாக சிறுபான்மை இன மக்கள் அடையும் நன்மை இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து விடயங்களுக்கும் கையேந்த வேண்டிய நிலைமையே ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி விஜயம் செய்யவிருந்த விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டுபாய்க்கு விஜயம் செய்யவிருந்த விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொழில்நுட்பக் கோளாறை விமான நிலைய அதிகாரிகள் கண்டுபிடிக்கவில்லை எனவும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரின் தீவிர கண்காணிப்பினால் குறித்த கோளாறு பற்றிய தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறு-காரணமாக ஜனாதிபதியின் டுபாய் விஜயம் சில மணித்தியாலம் காலதாமதமானது. ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூஎல் 1207 என்னும் விமானத்தில் ஜனாதிபதி டுபாய்க்கு பயணம் செய்யவிருந்தார்.

இறுதி நேரத்தில் குறித்த விமானத்தைச் சோதனை செய்த போது விமானத்தின் ஓர் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இயந்திரத்திற்கு எரிபொருள் கொண்டு செல்லும் ஹைட்ரோலிக் கட்டமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளது.

எனினும், விமான நிலைய அதிகாரிகள் காற்றுச் சீராக்கியில் கோளாறு ஏற்பட்டுள்ளதாகக் கருதி அதனை சரி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தீவிர சோதனை நடத்தி தொழில்நுட்பக் கோளாறை கண்டுபிடிக் கும் வரையில் விமான நிலைய அதிகாரிகளுக்கு இந்தக் கோளாறு பற்றி தெரிந்திருக்கவில்லை.

இதன் பின்னர் ஜனாதிபதி வேறு ஓர் விமானத்தில் டுபாய்கான விஜயத்தை தொடர்ந்தார். நாட்டின் தலைவர் பயணம் செய்யவிருந்த விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டமை மற்றும் அதனை உரிய முறையில் பழுதுபார்க்காமை குறித்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் சிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சஜின வாஸ் குணவர்தன, மேல் மாகாணசபை உறுப்பினர் நவுசர் பௌசி ஆகியோர் டுபாய்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

சர்வதேச எரிசக்தி மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கில் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் டுபாய்கு விஜயம் செய்துள்ளனர்.

# 39 கிலோ மீற்றர் உயரத்திலிருந்து குதித்தால்......

**என்.ராமதுரை**

பெலிக்ஸ் பாம்கார்ட்னர் என்ற 43 வயது ஆஸ்திரியர் ஒக்ரோபர் 14 ஆம் திகதி சுமார் 39 கிலோ மீற்றர் உயரத்திலிருந்து கீழே குதித்து உலக சாதனை படைத்துள்ளார். அவர் கீழே குதித்த காட்சி உலகம் முழுவதிலும் தொலைக் காட்சியில் காட்டப்பட்டது.

அவர் வானில் அவ்வளவு உயரத்திலிருந்து கீழே குதித்தது சாதனை தான்.ஆனால் அதைவிட அந்த அளவு உயரத்துக்கு அவர் போய்ச் சேர்ந்தார் என்பதே பெரிய சாதனை. விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட விண்வெளி உடையை அவர் அணிந்திருந்தார் என்பதால் பிழைத்தார்.

அப்படியின்றி பலூனுக்கு அடியில் இணைக்கப்பட்ட பெரிய பிரம்புக் கூடையில் உட்கார்ந்தபடி சென்றிருந்தால் 39 கிலோ மீற்றர் உயரத்தை எட்டுவதற்குமுன்னரே அவர் 'மேல் லோகத்துக்கு' போய்ச் சேர்ந்திருப்பார். அது ஏன்?

1862 ஆம் ஆண்டில் பிரிட்டனைச் சேர்ந்த ஜேம்ஸ் கிளைஷர், ஹென்றி காக்ஸ்வெல் ஆகிய இருவரும் ஒரு பெரிய பலூனின் அடிப்புறத்தில் இணைக்கப்பட்ட வாய் திறந்த பெரிய பிரம்புக் கூடைக்குள் அமர்ந்தபடி உயரே கிளம்பினர். அப்போதெல்லாம் உயரே செல்வதற்கு இந்த முறையே பின்பற்றப்பட்டது. 11 கிலோ மீற்றர் உயரத்தை எட்டியதும் இருவரும் கடும் குளிரால் நடுங்கினர். அந்த உயரத்தில் குளிர் மைனஸ் 11 டிகிரி.


அந்த இருவருக்கும் கைகால்கள் உணர்விழந்தன. கண் இருண்டது. நினைவு தடுமாற ஆரம்பித்தது. கிளைஷர் நினைவிழந்து விட்டார். உயிருக்கு ஆபத்து ஏற்படப் போவதாக உணர்ந்த காக்ஸ்வெல் கைகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் பற்களால் ஒரு கயிற்றைப் பிடித்து இழுத்தார். உடனே பலூன் கீழே இறங்க ஆரம்பித்தது. நல்ல வேளையாக இருவரும் உயிர் பிழைத்தனர். அவர்கள் சென்ற உயரம் 11,887 மீற்றர்.

காற்று மண்டல நிலைமைகள் பற்றி அவ்வளவாக அறியப்படாத காலத்தில் அவர்கள் இவ்வாறு உயரே சென்றனர்.

வானில் உயரே செல்லச் செல்ல காற்று அடர்த்தி குறைய ஆரம்பிக்கும். என்னதான் சுவாசித்தாலும் உடலுக்குத் தேவையான ஒட்சிசன் கிடைக்காது. ஒரு கரண்டி மருந்தை அரைத் தம்ளர் தண்ணீருடன் சேர்த்து அருந்தினால் மருந்து உடலில் சேரும். அப்படியின்றி ஒரு கரண்டி மருந்தை அண்டா தண்ணீரில் சேர்த்து அதிலிருந்து அரைத் தம்ளர் தண்ணீரை எடுத்து அருந்தினால் உடலில் மருந்து சேர வாய்ப்பே இல்லை.

அது மாதிரியில் அடர்த்தி குறைந்த காற்றை என்னதான் முழுக்க உள்ளே இழுத்து சுவாசித்தாலும் உடலுக்குக் கிடைக்கின்ற ஒட்சிசன் மிக அற்ப அளவில்தான் இருக்கும்.

ஆகவேதான் 40 ஆயிரம் அடி (சுமார் 12 கி.மீ.) உயரத்தில் பறக்கின்ற பயணி விமானங்களில் பயணிகள் பிரச்சினையின்றி சுவாசிக்க தகுந்த காற்றழுத்தம் இருக்கும்படி பார்த்துக்கொள்கின்றனர். தவிர, அவசர நிலைமை ஏற்பட்டால் பயணிகள் சுவாசிப்பதற்கென விமானத்தில் ஒவ்வொரு இருக்கைக்கும் மேலே ஒட்சிசன் அளிக்கும் கருவி உள்ளது. இந்த விமானங்கள் ஒரு வகையில் காற்று அடைத்த 'பலூன்களே' விமானத்தின் வெளிப்புற சுவர்களில் ஓட்டை விழுந்தால் விமானத்தில் உள்ள அனைவரும் வெளியே தூக்கி எறியப்படுவர்.











சுவாசிக்க தகுந்த காற்றழுத்தம் இல்லாத நிலையில் சுமார் 9100 மீற்றர் உயரத்தில் ஒருவர் ஒரு நிமிஷ நேரம் இருந்தால் நினைவு போய் விடும். 15 ஆயிரம் மீற்றர் உயரத்தில் 15 வினாடியில் நினைவு இழப்பார்.

வானில் 19.2 கிலோ மீற்றர் உயரத்துக்கு மேலே சென்றால் உடலில் உள்ள திரவங்கள் ஆவியாக ஆரம்பிக்கும். உடலிலுள்ள இரத்தம் கொதிக்க ஆரம்பிக்கும். உடல் பயங்கரமாக வீங்கும். மொத்தத்தில் மரணம் நிச்சயம்.

ஆகவே தான் பெலிக்ஸ் பாம்கார்ட்னர் ஒன்றன் மேல் ஒன்றாக நான்கு அடுக்குகளாக அமைந்த விண்வெளிக் காப்பு உடையை (Space suit) அணிந்து உயரே சென்றார். அடுக்கடுக்கான இந்த ஆடைகள் அவருக்குத் தகுந்த காற்றழுத்தத்தை அளித்தன. வெளியே நிலவிய குளிர் தாக்காமல் தடுத்தன. சூரியனிலிருந்து வெளிப்படும் ஆபத்தான கதிர்வீச்சு தாக்காமல் பாதுகாப்பு அளித்தன.

அவர் பலூன் மூலம் உயரே செல்லும் போதும் பின்னர் கீழே குதிக்கும் போதும் அவரது உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களை உடனுக்கு உடன் தெரிவிக்க அவரது உடலில் பல உணர் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவரது உடையில் கம்ப்யூட்டர் சில்லுகள் பொருத்தப்பட்டிருந்தன. கமெராவும் பொருத்தப்பட்டிருந்தது.

பெலிக்ஸ் பாம்கார்ட்னர் பலூனில் உயரே கிளம்பு முன்னர் விசேஷ உணவை அருந்த வேண்டியிருந்தது. வயிறு, குடல் என உடலில் எங்கும் வாயுவே இருக்கக்கூடாது என்பதற்காக விசேஷ உணவு. உயரே கிளம்பும் நேரம் வரை சுமார் 2 மணி நேரம் அவர் சுத்த ஒட்சிசனை சுவாசிக்கும்படி செய்யப்பட்டார். இரத்தத்தில் சிறிது கூட நைதரசன் வாயு இருக்கக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு. (நாம் சாதாரணமாக சுவாசிக்கும் காற்றில் நைதரசன் 78 சதவிகிதம் உள்ளது. ஒட்சிசன் 21 சதவிகிதம் உள்ளது)

அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாகாணத்தில் ஒக்ரோபர் 14 ஆம் திகதி உள்ளூர் நேரம் காலை 9-30 மணிக்கு பெலிக்ஸ் பாம்கார்ட்னரை சுமந்தபடி ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூன் உயரே கிளம்பியது. ஹீலியம் வாயு காற்றை விட லேசானது என்பதால் அது மேலே செல்லத் தொடங்கியது.

பலூன் 1,28,000 அடி உயரத்தை (39 கி.மீ.) எட்டுவதற்கு இரண்டு மணி நேரம் பிடித்தது. அந்த உயரத்தை எட்டியதும் பெலிக்ஸ் தனது கூட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து கீழ் நோக்கிக் குதித்தார்.

மிக உயரத்திலிருந்து குதிப்பதிலும் ஆபத்துகள் உண்டு. தொடர்ந்து கரணம் அடித்தபடி விழக்கூடாது. அப்படி ஏற்பட்டால் நினைவு போய் விடும். கண்கள், மூளை, இதயம் ஆகியவை பாதிக்கப்படும்.

சில வினாடிகள் கரணம் அடித்தபடி விழுந்து கொண்டிருந்த பெலிக்ஸ் நல்ல வேளையாக சுதாரித்துக் கொண்டார். முறைப்படி அதாவது தலை கீழ் நோக்கி இருக்க, கைகள் உடலோடு ஒட்டியிருக்க - ஒலிம்பிக் போட்டியில் நீச்சல் குளத்தில் குதிக்கின்ற நீச்சல் வீரர்களின் பாணியில் - கீழ் நோக்கி இறங்கலானார். அவர் நான்கு நிமிஷம் 20 வினாடி நேரம் வான் வழியே தொடர்ந்து விழுந்து கொண்டே இருந்தார்.

ஒரு கட்டத்தில் அவர் கீழ் நோக்கி மணிக்கு 1340 கிலோ மீற்றர்வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தார். இது ஒலி வேகத்தை விடவும் அதிகம். இவ்வளவு வேகத்தை மனித உடல் தாங்குமா என்ற கேள்வி இருந்தது.நல்லவேளையாக பெலிக்ஸுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. வானில் இந்த அளவு வேகத்தில் 'பயணம்' செய்த முதல் நபர் அவர்தான்.

தரையிலிருந்து சில ஆயிரம் அடி உயரத்தில் பாரசூட் திட்டமிட்டபடி விரிந்தது. பின்னர் அவர் பொத்தென்று தரையில் வந்து குதித்தார். உயரே இருந்து கீழே வந்து சேர 10 நிமிஷங்களே ஆகின.

உலகில் வானில் மிக உயரத்திலிருந்து குதித்த சாதனை, அதி வேகமாகப் பாய்ந்த சாதனை. பலூன் மூலம் மிக உயரத்துக்குச் சென்ற சாதனை என அவர் மூன்று சாதனைகளைப் படைத்தவரானார்.

பெலிக்ஸ்- 16 வயதிலேயே பாரசூட்டிலிருந்து குதிப்பதில் பயிற்சி பெற ஆரம்பித்தவர். மிக உயர்ந்த கட்டடங்கள் மிக உயர்ந்த பாலங்கள் ஆகியவற்றிலிருந்து குதித்து சாதனை படைத்தவர். அவருக்கு அதே வேலை.

பிறகு அவர் வானில் 21 கிலோ மீற்றர், 29 கிலோ மீற்றர் என மிக உயரத்திலிருந்து குதிப்பதில் அனுபவம் பெற்றார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

**11 கிலோ மீற்றர் உயரத்தை எட்டியதும் இருவரும் கடும் குளிரால் நடுங்கினர். அந்த உயரத்தில் குளிர் மைனஸ் 11 டிகிரி. இருவருக்கும் கைகால்கள் உணர்விழந்தன. கண் இருண்டது. நினைவு தடுமாற ஆரம்பித்தது. கிளைஷர் நினைவிழந்து விட்டார். உயிருக்கு ஆபத்து ஏற்படப் போவதாக உணர்ந்த காக்ஸ்வெல் கைகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் பற்களால் ஒரு கயிற்றைப் பிடித்து இழுத்தார்.**

# மாகாணசபை முறைமை நீக்கத்திற்கு எதிராக அணிதிரள அழைப்பு



13ஆவது திருத்த சட்டத்தை இல்லாதொழித்து மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எதிராக அனைத்து மாகாண சபைகளும் போராட முன்வர வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினரான முஜீபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே மாகாண சபை முறைமை நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலுள்ள அங்கத்துவ கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முனணி போன்ற இனவாத கட்சிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மாகாண சபை முறைமையை ஒழிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதனால், மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எதிராக அனைத்து மாகாண சபைகளும் போராடவேண்டும் மேல்மாகாண சபையின் மாதாந்த அமர்வில் மாகாண சபை முறைமை ஒழிப்புக்கு எதிராக பிரரேணை யொன்றை கொண்டு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வெளிநாடு செல்லத் தடை




(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2013ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவடையும் வரை வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாரம் நாடாளுமன்றத்தில் சகலரும் பிரசன்னமாகியிருக்குமாறு ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இவ்வாரம் முக்கியமான சில சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட இருப்பதனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சகலரையும் பிரசன்னமாகி இருக்குமாறு அறிவுத்தப்பட்டுள்ளது.

## கோல்டன் கீயில் வைப்புச் செய்த 18 பேர் தற்கொலை



கோல்டன் கீ திட்டத்தில் வைப்புச் செய்த 18 பேர் உரிய நியாயம் கிடைக்காத காரணத்தினால் மன முடைந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வைப்புச் செய்த பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், மன உளைச்சலினால் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட 50இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் துள்ளனர்.

பணத்தை வைப்புச் செய்த 3000இற்கும் மேற்பட்டவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவருகிறது.

# மாகாண அதிகாரங்களைப் பறிக்கிறது திவிநெகும

## கொதிக்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

திவிநெகும சட்ட மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் வகையில் அமைந்துள்ளதா என்பதை ஆராய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்தச் சட்ட மூலத்தில் உள்ள சில விடயங்களை ஏற்றுக் கொள்வதாக இருந்தபோதும், அது மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறித்துக் கொள்ளும் வகையில் அமையக்கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.


கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்டமூலமானது சமர்ப்பிக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாண சபையில் குறித்த சட்டமூலம் சமர்ப்பிக் கப்பட்ட போது, அதற்கு மேலும் கால அவகாசம் கோருமாறு முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்களிடம் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருந்தபோதும், கட்சித் தலைமையின் உத்தரவையும் மீறிய மாகாணசபை உறுப்பினர்கள் அந்த சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதன் காரணமாகவே, அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக் கப்பட்டுள்ளதாக, கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி கூறியுள்ளார்.

# நல்லடக்கம் செய்யப்பட்டவர் 2 வாரங்களில் வீடு திரும்பினார்



களுத்துறை பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட நபர் ஒருவர் இரண்டு வாரங்களின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

களுத்துறை வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்த சடலமொன்றை தமது தந்தையின் சடலம் என பிள்ளைகள் அடையாளம் கண்டு, அதனைப் பொறுப்பேற்று இறுதிக் கிரியைகள் செய்துள்ளனர்.

நல்லடக்கம் செய்து இரண்டு வாரங்களின் பின்னர் குறித்த நபர் உயிருடன் வீடு திரும்பியுள்ளார். குறித்த நபர் களுத்துறை-கட்டுகுருந்த கரையோரத்தில் முன்னர் வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து லாகொஸ்வத்த என்னும் பிரதேசத்தில் குறித்த நபருக்கு வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. வேலைக்குச் செல்வதாகத் தெரிவித்து சென்ற தந்தையை சில நாட்களாக காணாததை தொடர்ந்து அவரது பிள்ளைகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, சுனாமியினால் அழிவடைந்த தமது பழைய வீட்டுக்கு அருகாமையில் நஞ்சருந்தி நபர் ஒருவர் ஆபத்தான நிலையில் களுத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பிள்ளைகளுக்கு தகவல் கிடைக்கப் பெற்றது.

தமது பழைய வீட்டிற்கு அருகாமையில் நஞ்சருந்தி உயிரிழந்தவர் தமது தந்தையாகவே இருக்கும் எனக் கருதிய பிள்ளைகள், சடலத்தைப் பொறுப்பேற்று இறுதிக் கிரியைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் ஊர் திரும்பிய நபர், தமது படம் ஒட்டப்பட்ட மரண அறிவித்தல்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். உறவினர் வீடொன்றுக்கு சென்றிருந்ததாக குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

## திவிநெகும குறித்து பேசும் தகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை

(கொழும்பு)

திவிநெகும சட்ட மூலம் தொடர்பில் கதைப்பதற்கான அதிகாரமும், தகுதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படுகின்ற மாகாண சபைகளில் 90 சதவீதமான உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கட்சியைச் சேர்ந்தவர்கள். கிழக்கு மாகாணத்தை தவிர தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வேறு எந்த மாகாண சபையிலும் உறுப்பினர்கள் இல்லை. அத்துடன் அவர்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகவும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே அவர்களுக்கு இந்த சட்ட மூலத்துக்கு எதிராக செயற்படுவதற்கு அதிகாரம் இல்லை.


இதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பு இலங்கையில் பிரிவினை வாதத்தை தோற்றுவிப்பதற்காக, புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலக அழகி போட்டியில் இலங்கைக்கு 3ஆம் இடம்






**உலக அழகி போட்டியில் கலந்துக் கொண்டிருந்த இலங்கையரான மதுசா மாயாதுன்னே மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். ஜப்பானின் ஒக்கினாவாவில் நடைபெற்ற 54வது உலக அழகி போட் டியில், இந்த முறை ஜப்பானிய அழகிக்கு முதலாம் இடம் வழங் கப்பட்டுள்ளது. பின்லாந்தின் அழகி இரண்டாம் இடம்பெற் றார். உலக நட்புக்கான அழகியாக மொரிசியஸ் தீவை சேர்ந்த அழகி தெரிவு செய்யப்பட்டார்.**



சித்தன்கேணி சிவன் கோயிலில் அமரர் சிவஞான பண்டிதக் குருக்களின் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரமஸ்ரீ சபா உமாபதி சர்மாவின் இறுவட்டு வெளியிடப்பட்டது. இறுவட்டுக்கு இசையமைத்த இசைக்கலைவாணி கலாவித்தகன் செல்வசந்திரன் உட்பட கலைஞர்கள் திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந. விஜயசுந்தரத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.
(படம்:கே.நந்தகுமார்.)

# ஆளணி பற்றாக்குறையுடன் வவுனியா கல்வியியல் கல்லூரி

## – பீடாதிபதி க.பேணாட்

(வவுனியா)

எமது கல்வியியல் கல்லூரியின் மாணவர் தொகைக்கேற்பவும் பயிற்சி நெறிக்கேற்பவும் 37 ஆசிரிய கல்வியியலாளர்கள் தேவையிருக்கும் நிலையில் 24 பேர் மட்டுமே கடமையிலுள்ளனர். இதனால் பல சவால்களுக்கு முகம் கொடுத்து கல்லூரி நடவடிக்கையை முன்னெடுத்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளதாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி க. பேணாட் தெரிவித்தார்.

வவுனியா தேசிய கல்வயியல கல்லூரியின் 19 ஆவது ஆண்டு விழா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

2009 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக எமது கல்வியியல் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இதன் காரணமாக வேறு இடங்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்ட பலர் 2011 ஆம் ஆண்டு மீண்டும் கடமைக்கு திரும்பியிருந்தனர். தொடர்ந்து இணைக்கப்பட்டவர்கள் 2012 ஆம் ஆண்டு கடமைக்கு திரும்பியிருந்தனர். எனினும் அவ்வாறானவர்களில் இருவர் நிரந்தர இடமாற்றம் பெற்றுக் கொண்டனர். ஒருவர் கற்கை விடுமுறையில் சென்றுள்ளார். இவ்வாறான நிலையில் இன்னும் 13 கல்வியியலாளருக்கு பற்றாக்குறை காணப்படும் நிலையில் சில பாடங்களுக்கு வருகை தரும் விரிவுரையாளர்களுடன் எமது ஆசிரிய கல்வியியலாளர்கள் அதிகப்படியான வேலைப் பழுவுடன் கல்வி சார் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இதேபோல் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்டுக் கூறுகின்ற கல்விசாரா பணியாளர் பற்றாக்குறையும் இக் கல்வியியல் கல்லூரியில் காணப்படுகினறது. அந்த வகையில் நிர்வாக காரியாலயத்தின் ஆளணி பற்றாக்குறை நிர்வாக நடவடிக்கைகளின் காலதாமதத்தையும் அங்கு கடமையாற்றுபவர்களின் வேலைப்பழுவையும் அதிகரித்துள்ளது. நூலக பணியாளர்கள் இருவர் நூலகர் நியமனம் கிடைத்து வேறு இடங்களுக்கு பணிக்குச் சென்றுள்ளதால் எமது நூலகர் தனியாக இயங்க வேண்டிய நிலையில் உள்ளார். காவலாளிகளில் நான்குபேர் மட்டுமே நிரந்தரகாவலாளிகளாகப் பணியாற்றுகின்றமை அவர்களது பணியைக்கடினமாக்கியுள்ளது. சமையலாளர்களும் விடுதி அத்தியட்சகரும் மிகுந்த சிரமத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. அதற்குக் காரணம் ஆளணி பற்றாக்குறையாகும். இவ்வாறான கல்விசாரா பணியாளர்களின் பற்றாக்குறை உள்ள நிலையில் நீண்ட காலமாக இங்கு பணியாற்றுவோர் இடமாற்றத்திலிருந்தும் பதில் ஒழுங்கு இல்லாமையினாலும் அவர்களது மனஸ்தாபங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை உள்ளது. இந்நிலையில் கல்விசாரா பணியாளர்களின் நியமனங்கள் கிடைக்குமாயின் பல்வேறு நிாவாக சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு கல்லூரியை மேலும் மேம்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (160)

# வீடுகள் புனரமைப்பு

(வரணி)

வரணி அம்மா கடை மேற்குப்பகுதியில் கடந்த காலங்களில் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட சமாதானத்தை அடுத்து அப்பகுதி வீதியும் திறக்கப்பட்டு மேற்கு காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட காணிகளுக்கு மக்கள் வேலி அமைத்து வருவதோடு வீடுகளையும் புனரமைத்து வருகின்றனர்.

தற்போது அக்காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளில் தென்னை மரங்களில் தேங்காய்களைப் பறித்து பயனடைகின்றனர்.


மேலும் காணிகளுக்கு எல்லையிட்டு வீடுகள் புனரமைப்புச்செய்து துப்பரவுப் பணியையும் மிகுந்த ஆர்வத்துடன் செய்து வருகின்றனர்.(150)

# வரணி நூலகத்தில் சிரமதானம்

(வரணி)

வரணி பொது நூலகத்தில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிரமதானப்பணிகள் கடந்த 19 ஆம் திகதி இடம் பெற்றது.

இதில் நூலக அபிவிருத்தி ஆலோசகர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டு சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். (150)



நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி தற்பொழுது பெய்து வரும் மழையினால் நீர் நிரம்பிக் காணப்படுகிறது. பாடசாலையின் முன் இரண்டு பக்கமும் மழை நீர் வடிந்து ஓடுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையினரிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# பாலங்கள் புனரமைப்பு

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பாலங்கள் மீள்நிர்மானம் செய்யப்படவுள்ளது.

வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகட்டுவான் வீதியில் சுமார் 10 கிலோ மீற்றர் நீளமான கொங்கிறீட் கால்வாய், ஓட்டுமடம் நல்லூர் வீதியில் சுமார் 1 கிலோமீற்றர் நீளமான கொங்கிறீட் கால்வாய் என்பன அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் உள்ள மதகு ஒன்றும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தப்பணிகளுக்கான நிதியை பெருந்தெருக்கள் அமைச்சு ஒதுக்கியுள்ளது. (54)

# முரசின் இன்றைய பலன்

(23.10.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 07 ஆம் திகதி. நட்சத்திரம் திருவோணம் முன்னிரவு 10.08 வரை. சித்தயோகம், நவமி முன்னிரவு 11.59 வரை.
இராகுகாலம் 3.02 - 4.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை.
எமகண்டம் 9.02 - 10.32 வரை, குளிகன் காலம் 12.02 - 1.32 வரை.
சரஸ்வதி பூஜை

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இரக்கம். விலகிய நண்பர் வருவர். தொழிலில் புதிய யுக்தி. கூடுதல் பணவரவு. ஆரோக்கியம். சுபமங்கலச்செலவு. மாணவர்கள் தேர்ச்சி. |
| ரிஷபம் | திறமையை வளர்க்கும் ஆர்வம். பணியில் முன்னேற்றம். தாராள பணவரவு. தெய்வ வழிபாடு. குடும்ப சச்சரவு நீங்கும். உறவினர் புரிதல். |
| மிதுனம் | உண்மை, நேர்மையால் சூழ்ச்சிகள் விலகும். வேலைச்சுமை. வரவுக்கு ஏற்ப செலவு. எதிர்பார்த்த உதவி தாமதம். முயற்சிகள் யாவும் வெற்றி. |
| கடகம் | பரிசுகள் வரும். எதிர்மறைகள் அனுகூலமாகும். அதிக உழைப்பு. உபரி வருமானம். உறவினர் வருகை. குடும்பத்தில் மகிழ்ச்சி. நல்ல செய்தி. |
| சிம்மம் | புதிய முயற்சிகள் வேண்டாம். கவலை ஒன்று தீரும். அளவான பணவரவு. சேமிப்பில் செலவு. உடன்பிறந்தவர்கள் பாசமழை. அரச உதவி. புகழ். |
| கன்னி | ஒவ்வொரு செயலும் வெற்றி. நண்பர்களுடன் மகிழ்வு. தொழில், வியப்பூட்டும் வளர்ச்சி. தாராள பணவரவு. விரும்பிய பொருள் வாங்குவீர்கள். |
| துலாம் | உற்சாகம். எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். தொழில், குளறுபடி விலகும். பணவரவும், சமூக அந்தஸ்தும். தேவை தீரும். மறுக்கப்பட்டவையும் கிடைக்கும். |
| விருச்சிகம் | குடும்ப சிந்தனை. அவசரப்பணிகள் உருவாகி சிரமம். சிக்கனம் நல்லது. உணவில் கவனம். அரசியல் பேச்சு நிதானம். பணிச்சுமை, உற்சாகம். |
| தனுசு | பணிகள் தாமதம். தொழிலில் மாறுபட்ட சூழல். வரவை விட செலவு கூடும். உதவி கேட்டு அதிருப்தி. இழப்புகள் ஏற்படும். அவசர முடிவுகள் வேண்டாம். |
| மகரம் | நேர்த்தியும் புதுமையும். புதியவர்க்கும் உதவுவீர்கள். தொழில் அனுகூலம். நிலுவைப் பணம் வசூலாகும். தாயின் தேவை பூர்த்தி. வெளியூர் சுப செய்தி. |
| கும்பம் | பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் வழக்கில் சாதகம். உதவிகள் செய்வீர்கள். திடீர் யோகம். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும். |
| மீனம் | உயர்வதற்கான யோசனைகள். பிள்ளைகளால் பெருமை. நெளிவு, சுளிவுகளில் தேறுதல். சாதிக்கும் நாள். திட்டவட்ட முடிவுகள். |

## கொல்கத்தா ஆறுதல் வெற்றி

(கேப்டவுன்)

சம்பியன் லீக் ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் டைட்டன்ஸ் அணிக்கெதிரான லீக் ஆட்டமொன்றில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஆறுதல் வெற்றிபெற்றது.


சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - டைட்டன்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டைட்டன்ஸ் அணி கப்டன் ஜார்ஸ்வெல்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதற்கமைய முதலில் ஆடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிஸ்லா 27, மக்கலம் 26, கப்டன் கம்பீர் 44, தாஸ் 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 189 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கி டைட்டன்ஸ் அணி 16.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி அடைந்தது. இதனால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் பாலாஜி சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட் வீழ்த்தினார்.

## வோஸ்னியாக்கி வசம் கிண்ணம்



(மொஸ்கோ)

கிரெம்ளின் கோப்பை ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில், டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

அரையிறுதிப் போட்டியில் சுவீடனின் சோபியா அர்விட்சனுடன் மோதிய, கரோலின் வோஸ்னியாக்கி, 6-3, 6-7 (4-7), 6-4 என்ற செட் கணக்கில் வென்றார். இதேபோல் மற்றொரு அரையிறுதிப்போட்டியில், அவுஸ்ரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர், சேர்பியாவின் அனா இவானோவிச்சை 2-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

இதையடுத்து, நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில், சமந்தாவும், வோஸ்னியாக்கியும் மோதினர். ஆரம்பம் முதலே இந்தப் போட்டி பெரும் விறுவிறுப்பாக இருந்தது. முதல் செட்டை (6-2), வோஸ்னியாக்கி கைப்பற்றிய நிலையில், அடுத்த செட்டை (6-4) சமந்தா கைப்பற்றினார். இதனால் இருவருக்கும் இடையே போட்டி பலமாக இருந்தது. 3ஆவது செட்டை கைப்பற்றுவதற்காக இருவரும் கடுமையாகப் போராடினர். ஆனால், வோஸ்னியாக்கி 7,5 என்ற கணக்கில் வென்றார். இதையடுத்து, 6-2, 4-6, 7-5 என்ற செட் கணக்கில் வோஸ்னியாக்கி வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றினார்



## டென்மார்க் ஓப்பன் பட்மின்ரன் சாய்னா சம்பியன்

(ஓடென்ஸ்)


டென்மார்க் ஓப்பன் பட்மின்ரன் தொடரில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் சம்பியன் பட்டம் வென்றார்.

டென்மார்க்கில் உள்ள ஓடென்ஸ் நகரில் டென்மார்க் ஓப்பன் சூப்பர் சீரிஸ் பிறிமியர் பட்மின்ரன் தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாய்னா, ஜேர்மனியின் ஜூலியானா செங்கை எதிர் கொண்டார்.

முதல் செட்டில் அசத்திய சாய்னா 21−17 என கைப்பற்றினார். பின் இரண்டாவது செட்டிலும் அபாரமாக ஆடிய செய்னா 21−8 என வென்றார். இறுதியில், சாய்னா 21−17, 21−8 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்றார். சமீபத்தில் முடிந்த லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இவர், நீண்ட ஓய்வுக்குப் பின் பங்கேற்ற முதல் தொடரில் பட்டம் வென்று அசத்தினார்.

இது, சாய்னாவின் 11ஆவது சம்பியன் பட்டம். தவிர இவர், இந்த ஆண்டு வென்ற 4ஆவது பட்டம். முன்னதாக இந்த ஆண்டு நடந்த இந்தோனேஷிய ஓப்பன், சுவிஸ் ஓப்பன், தாய்லாந்து ஓப்பன் தொடர்களில் பட்டம் வென்றார்.

இதுகுறித்து சாய்னா கூறிதாவது: டென்மார்க் ஓப்பன் தொடரில் முதன்முறையாக பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக டென்மார்க் மற்றும் இந்திய இரசிகர்களுக்கு எனது மன மார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற பின், என் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. நீண்ட ஓய்வுக்குப்பின் விளையாடியதால், புத்துணர்ச்சியுடன் களமிறங்கினேன். எனது வலது முழங்காலில் சிறிய பாதிப்பு இருந்த போதிலும், முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிக்க முடிந்தது. இதற்காக கடவுளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.



## பல்கலை சென்று படிக்க ஆசை

பல்கலைக்கழகம் சென்று படிக்கவேண்டும் என்பதே எனது வாழ்க்கையின் முக்கியமான விரும்பம் என சேர்பியாவின் ரென்னிஸ் வீரர் ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

சிறு வயதில் கல்வியைக் கற்றதில்லை. ஒரு ஆண்டில் இரண்டு, மூன்று முறை தேர்வு எழுத வேண்டியிருந்தது. இதனாலேயே, பள்ளிக்கு சரியாக செல்ல மாட்டேன். நான் பல்கலைக்கழகத்திற்கு சென்றது கூட கிடையாது. எனது வாழ்க்கையின் முக்கியமான விருப்பம், பல்கலைக்கு செல்ல வேண்டும் என்பதுதான். ஏனெனில், அங்கு கற்றுத்தரப்படும் கல்வி, மாணவர்களோடு கலந்து படித்தல் போன்றவற்றை விரும்புகிறேன். இதுதான், ஒரு மனிதனின் மகிழ்ச்சியான காலகட்டம்.

எங்கள் நாட்டில் உள்ள பள்ளிகளின் நடைமுறைப்படி, தொடக்க கல்வியின் போது, இரண்டு மொழிகளைப் படிக்க வேண்டும். இதில், ஆங்கிலம் கட்டாய மொழி, மற்றொன்றை நமது விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்து கொள்ளலாம். நான் ஜேர்மன் மொழியைத் தேர்வு செய்தேன். என் சகோதரர்களுக்கும் அதிக மொழிகள் தெரியும்.

எமது நாட்டில் ரென்னிஸ் போட்டியை வளர்க்க வேண்டும் என்ற விருப்பமும், அதனை மூலம் அதிகமான இளம் வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற கனவும் எனக்கு உண்டு. அந்த இலக்கை நிச்சயம் நிறைவேற்ற கடுமையாக முயற்சிப்பேன்.

நடால் சில தொடர்களில் காயம் காரணமாக பங்குபற்ற முடியாமல் போனது எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. அவர் சிறந்த வீரர். சிறந்த வீரர்களுடன் மோதி வெற்றிபெறுவதில்தான் எம்மை மேலும் வளர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

## அரையிறுதிக்குத் தகுதிபெறுவோம்

(கேப்டவுன்)

சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என டில்லி அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சிறப்பான வெற்றி பெற்றிருப்பதில் மகிழ்ச்சி. இதற்கு பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பான ஆட்டமும் முக்கிய காரணம். அதிலும் குறிப்பாக, அகாக்கரின் நிதானமான ஆட்டமே வெற்றியை உறுதி செய்தது. எனவே, இது போன்று அடுத்து வரும் போட்டிகளிலும் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெறுவோம். எங்கள் அணியில் சிறந்த பல வீரர்கள் இருப்பது மகிழ்ச்சி. சேவாக், மோர்க்கல் என அனைவரும் சிறப்பாக ஆடியமை மகிழ்ச்சி எனவும் தெரிவித்தார்.



இங்கிலீஸ் பிறீமியர் லீக் கால்பந்துப் போட்டித் தொடரின் நியூகேசில் யுனைட்டட் மற்றும் சண்டர்லேண்ட் அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. இதில் பந்தை தட்டிச் செல்ல அந்தரத்தில் போராடிய இரு அணி வீரர்களையும் காணலாம்.

## பரபரப்பான ஆட்டத்தில் டில்லி வெற்றி



(கேப்டவுன்)

பரபரப்பான ஆட்டத்தில் 3 விக்கெட் வித்தியாசத்தில் பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியை வீழ்த்தி, ஏ பிரிவில் டில்லி டேர்டெவில்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்துள்ளது.

சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டமொன்று கேப்டவுனில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் டில்லி, பேர்த் அணிகளுக்கு இடையிலான போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் ஆடிய பேர்த் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷோன் மார்ஷ் 39, கடிச் 34, மிட்சல் மார்ஷ் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்க்கல் மூன்று, அஜித் அகாக்கர் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 122 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி டேர்டெவில்ஸ் அணி 19.3 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சேவாக் 52, பதான் 14, அகாக்கர் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக அகாக்கர் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் டில்லி அணி அரையிறுதி வாய்ப்பைத் தக்க வைத்துள்ளதுடன், பேர்த் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசியத்தில் முதல் நிலை வீராங்கனையாக வலம் வருவதே எனது இலக்கு

## தேசியத்தில் தங்கம் வென்ற பவித்திரா தெரிவிப்பு



(அளவெட்டி)

தேசிய ரீதியில் கோலூன்றலில் முதல் நிலை வீராங்கனையாக வரவும், வளரவும் வேண்டும் என்பதே எனது இலக்கு. இந்த இலக்கை எட்டக் கூடிய ஆற்றல் என்னிடம் இருக்கின்றது. ஆனால், அதற்கான வசதி வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் நிச்சயம் வெகுவிரைவில் அந்த இலக்கை அடைந்து எமது தேசத்திற்கு பெருமை சேர்க்க முடியும் என அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீராங்கனை அருந்தவம் பவித்திரா தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் 19 வயதுப் பிரிவு கோலூன்றி பாய்தலில் தங்கம் வென்று அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும், வடமாகாணத்திற்கும் அருந்தவம் பவித்திரா பெருமை சேர்த்தார்.

சாதனை நிலைநாட்டியமை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன், பவித்திராவிடம் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எதை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற எண்ணமும் விருப்பும் எமக்குச் சிறு வயதிலிருந்தே தோன்றிவிடும். அந்த வகையில் கோலூன்றிப் பாய்தலில் போட்டிகளில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பு எனக்கு ஏற்பட்டதுண்டு. ஆரம்பத்தில் இப்போட்டி குறித்த தெளிவான விளக்கங்கள் அதிகளவில் எனக்குத் தெரியாது. இருப்பினும் நான் அதில் கொண்ட ஈடுபாடு காரணமாக அதன் நுட்பங்களைக் கற்றுக்கொண்டு காலை, மாலை என தொடர் பயிற்சிகளை மேற்கொண்டேன்.

இதற்கு எனது பயிற்றுநரான த. பாகீஸ்வரன் அவர்களது பூரண ஒத்துழைப்பே முக்கிய காரணம். கோலூன்றிப் பாய்தல் குறித்த முழு விளக்கத்தை அவரிடமிருந்தே நான் கற்றுக்கொண்டேன். என்னுடைய ஆற்றலைப்புரிந்து கொண்ட முதல் நபர் எனது பயிற்றுநரே. அந்த வகையில் அவருக்கு நான் என்றென்றும் நன்றிக் கடன் பட்டவள்.

அத்துடன் எனது முயற்சிக்கு என்போக்கிற்கு எதுவித தடையும் போடமால் எனக்கு எந்தவேளையிலும் உற்சாகமளித்த எனது குடும்பத்தினர் மற்றும் கல்லூரி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சக மாணவர்கள் என எல்லோரும் என்னை அவ்வப்போது பாராட்டி எனக்கு ஊக்கமளித்தனர்.

இவர்களின் ஊக்கம் நான் சாதிக்க வேண்டும் என்ற வெறியை எனக்குள் ஏற்படுத்தியது. அந்த வகையில் தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து முதலிடத்தைப் பிடித்து வருகின்றேன்.

இந்த ஆண்டும் சாதனையுடன் தங்கம் வெல்ல வேண்டும் என்ற பெரு விருப்பு எனக்கு இருந்தது. அதேபோன்று கடந்த ஆண்டு என்னால் ஏற்படுத்தப்பட்ட சாதனையான 3.00 மீற்றரை முறியடித்து 3.01 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தை வென்றது நான் இது வரை ஏற்படுத்திய சாதனைகளில் சிறந்ததாக அமைந்தது. இதையிட்டு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

கடந்த ஆண்டுகளில் ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கின்றேன். இதில் நான்காவது இடத்தைப் பிடித்தேன். எனது வயது, அனுபவமின்மை போன்ற காரணங்களால் இதில் சாதிக்கமுடியாமல் போனது ஏமாற்றமே. இருப்பினும் நான் சோர்ந்துவிடவில்லை. இப்போட்டி நிகழ்வில் பங்குபற்றியதைச் சிறந்த பயிற்சிக் களமாகவும், அடுத்த நிலைக்கு போவதற்கான உந்து சக்தியாகவும் பார்க்கின்றேன். அத்துடன் இப்போட்டி நிகழ்வில் முதன் முதலாக தமிழில் சத்தியப்பிரமாணம் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தை இட்டு பெரு மகிழ்ச்சி அடைந்தேன். இந்தத் தருணத்தை இன்று வரை என்னால் நம்பமுடியவில்லை.

இது போன்ற தருணங்கள் மேன்மேலும் வர வேண்டும் என்பதே எனது விருப்பம். அந்தப் பாதையில் நான் சிறப்பான முறையில் பயணிப்பதாகவே உணர்கின்றேன். என்னைப் பொறுத்த வரையில் கோலூன்றிப் பாய்தலில் முதல் நிலை வீராங்கனையாக வலம் வரவேண்டும் என்பது கனவு. இலக்கு. இதை நோக்கி வெற்றிகரமாகப் பயணிக்க என்னால் முடியும். இந்த நிலையை அடைய எனது பயிற்றுநரும் எப்பொழுதும் எனக்கு ஒத்துழைப்புத் தருவதற்கு தயாராகவே இருக்கின்றார். இருப்பினும் இதற்கான நவீன வசதிவாய்ப்புகள் எனக்கு உருவாக்கித் தரும் பட்சத்தில் இந்த இலக்கை,கனவை வெகுவிரைவில் அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

தேசிய ரீதியில் கோலூன்றிப் பாய்தலில் சாதிக்கக் கூடிய வீராங்கனைகளை எமது கல்லூரி உருவாக்கியிருக்கின்றார் என்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அதேபோன்று சர்வதேச ரீதியில் சாதிக்கக் கூடிய வீர,வீராங்கனைகளையும் எமது கல்லூரிஎதிர் வரும் காலங்களில் உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதற்குரிய வசதி வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் எம்மால் அந்த இலக்கை அடைய முடியும் என்று நம்புகின்றேன் என்றார்.(93)



ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியின் போது தமிழில் சத்தியப்பிரமணம் செய்த பவித்திரா...

# பாகிஸ்தான் நட்சத்திர அணி அபார வெற்றி

பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகளை மீளவும் கொண்டு வருவதற்கு முன்னோடியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உத்தியோகபூர்வமற்ற ருவென்ரி-20 தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தானின் நட்சத்திரப் பதினொருவர் அணி வெற்றிபெற்றுள்ளது.

சர்வதேச உலகப் பதினொருவர் அணியை அவ்வணி 84 ஓட்டங்களால் வெற்றிகொண்டது. கராச்சி தேசிய மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் நட்சத்திரப் பதினொருவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் நட்சத்திரப் பதினொருவர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.முதலாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்களை 6.1 ஓவர்களில் குவித்த அவ்வணி, தொடர்ச்சியாக வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் உமர் அக்மல் 37 பந்துகளில் 67 ஓட்டங்களையும், ஷைஷப் ஹசன் 21 பந்துகளில் 54 ஓட்டங்களையும், இம்ரான் நஷீர் 19 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சர்வதேச உலகப் பதினொருவர் அணி சார்பாக தாண்டி ஷபலாலா 3 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும், ஷபூர் ஷட்ரன் 4 ஓவர்களில் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ரெய்லர், அன்ட்ரே நெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

223 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சர்வதேச உலகப் பதினொருவர் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 84 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது ஓவரில் சனத் ஜெயசூரிய 10 ஓட்டங்களைப் பெற்ற போதிலும், 6ஆவது பந்தில் ஆட்டமிழந்திருந்தார். தொடர்ந்து வந்த வீரர்களால் ஓட்டங்களைப் பெற முடிந்திருக்கவில்லை. துடுப்பாட்டத்தில் ஷபூர் ஷட்ரன் 51 பந்துகளில் 42 ஓட்டங்களையும், லூட்ஸ் பொஸ்மன் 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் அனைத்து நட்சத்திரப் பதினொருவர் அணி சார்பாக தபிஷ்ஷ கான் 4 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், வகாப் றியாஷ் 3 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அன்வர் அலி, ஷகிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக உமர் அக்மல் தெரிவானார்.

## விளையாட்டுச் செய்திகள்

# எனக்கும் இடமுண்டு

இங்கிலாந்து டெஸ்ட் தொடரிற்கான இந்திய அணியில் எனக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று நம்புகின்றேன் என அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

நான்கு, ஐந்து நாள் போட்டிகளில் விளையாடக் கூடிய உடற்தகுதியை நான் பெற்றுவிட்டேன். உள்ளூர் போட்டிகளில் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடி இரட்டைச் சதம் அடித்தது எனது உடற்தகுதியை நிரூபிக்கக்கூடிய எடுத்துக்காட்டாகும் எனத் தெரிவித்தார்.



யாழ். பிரதேச செயலக தெரிவு அணிக்கும், உடுவில் பிரதேச செயலக தெரிவு அணிக்குமிடையில் நடைபெற்ற கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ். பிரதேச செயலக அணி வீரர் கோல் அடிக்க முன்னேறுவதைக் காணலாம். (எஸ்.பி.)

# விரைவில் மீள்வார்கள்

இந்திய அணி வீரர்களான வீரேந்திர சேவக், கௌதம் கம்பீர் இருவரும் ஓட்டங்கள் குவிக்க முடியாமல் தடுமாறி வருவது கவலை அளிக்கிறது. இருப்பினும் இவர்கள் விரைவில் மீள்வர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என முன்னாள் கப்டன் கபில் தேவ் கூறியுள்ளார்.


அனுபவ வீரர்களான சேவக், கம்பீர் ஆட்டத் திறன் இல்லாதது அணிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

அவர்கள் இருவரும் ஒரே சமயத்தில் ஓட்டங்கள் குவிக்க முடியாமல் திணறுவது கவலை அளிக்கிறது. விரைவில் அவர்கள் சிறப்பாக விளையாடுவார்கள் என நம்புகிறேன். கப்டன் பதவியில் இருந்து டோனியை நீக்க வேண்டும் என்பது தவறு. அவர் சிறப்பான முறையில் அணியை வழி நடத்துகின்றார். ஹோலியின் ஆட்டம் சிறப்பாக உள்ளது. அவர் சம்பியன் வீரர். இந்தியாவின் எதிர்காலச் சுவர் என்றார்

# விலங்குகள் இல்லாமல் பூமியும், மனிதரும் இல்லை

- முல்லை -

வனத்தை ஆக்கிரமித்து தேயிலை, கோப்பித் தோட்டங்களை அமைத்தவர்களுக்கும், வாழை, கரும்பு பயிர் செய்பவர்களுக்கும் யானைகளையும் தெரியாது, அவற்றின் வாழ்க்கை முறையும் தெரியாது. பிற மிருகங்களைப் போல யானைகள் தங்களுக்கென்று தனியாக வாழிடங்களை அமைத்துக்கொள்வதில்லை. 20 முதல் 25 நாட்கள்



வரை மட்டுமே ஓரிடத்தில் தங்கும். காரணம் உணவு. ஒரு யானைக்கு நாளொன்றுக்கு 250 கிலோ உணவும் 150 லீற்றர் தண்ணீரும் தேவை. என்றால் ஒரு கூட்டத்துக்கு? அதுவும் யானையின் உணவுகள் ஓரிடத்தில் குவிந்து கிடப்பதில்லை. பரவலாக விளைவது.

பலநூறு ஆண்டுகளாக தம் மூதாதைகள் பயன்படுத்திய பாதைகளையே பிற யானைகளும் பயன்படுத்துகின்றன. யானைகளின் மரபணுவிலேயே அப்பாதைகள் பதிவாகிவிடும் என்கிறார்கள் விலங்கியல் நிபுணர்கள். யானையைப் போல பரந்த வாழிடம் கொண்ட விலங்குகள் வேறில்லை. ஒரு யானை ஆண்டுக்கு 500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை தன் வாழிடமாக வைத்திருக்கிறது. எந்த மாதத்தில் எந்த இடத்தில் என்ன உணவு கிடைக்கும் என்பதைக்கூட யானைகள் அறிந்து வைத்திருக்கும். சுழற்சி முறையில் அப்பகுதிகளுக்குச் சென்று கொண்டேயிருக்கும்.

மனிதர்களால் வனப்பகுதிகளில் நிகழ்ந்த ஆக்கிரமிப்புகள் வனத்தின் சுற்றளவைச் சுருக்கிவிட்டதால் யானைகளின் வாழிடங்களும் சுருங்கிப் போய்விட்டன. வழக்கமாக வலம்வரும் பாதைகள் மறிக்கப்படுவதால் குழம்பிப் போகும் யானைக் கூட்டம், திசைமாறி நகரங்களுக்குள், குடியிருப்புகளுக்குள் நுழைந்து விடுகின்றன. கால்போன போக்கில் கிடைக்கும் வாழை, சோளம், கரும்பு போன்ற உணவுகளுக்கு அடிமையாகி விடுகின்றன. அதனால் மீண்டும், மீண்டும் அதுபோன்ற விளைநிலங்களை நாடிச் செல்கின்றன. அதற்கு இடையூறு செய்யும் மக்கள் மீது யான்னைகளின் கோபம் திரும்புகிறபோதுதான் உயிர்ப் பலி நிகழ்கிறது.

## வேட்டையாடப்படும் விலங்குகள்

விலங்குகளின் உறுப்புகளுக்கான திரைமறைவுச் சந்தை உலகம் முழுதும் பல்லாயிரம் கோடி ரூபா அளவுக்கு நடைபெறுகிறது. தந்தம், தோல், பற்களுக்காக யானைகள் வேட்டையாடப்படுகின்றன. மென்மையான முடிகள் நிரம்பிய தோலுக்காக நீர்நாய்கள் வேட்டையாடப்படுகின்றன. மான்கள், பாம்புகள், புலிகள் போன்றவை தோலுக்காகக் கொல்லப்படுகின்றன. மான்களின் கொம்புகளுக்கும், பாம்பு இறைச்சிக்கும், புலி பற்களுக்கும் நல்ல விலை கிடைக்கிறது. மருந்துக்காக கருங்குரங்குகளும், முதலைகளும் கொல்லப்படுகின்றன. கஸ்தூரி என்ற வாசனைப் பொருளுக்காக கஸ்தூரி மான்கள் கொல்லப்படுகின்றன. சிங்கம், காட்டுக்கழுதை, காட்டு ஒட்டகங்கள், காட்டெருமை, கடமான், சிறுத்தை போன்ற மிருகங்களும் பல்வேறு காரணங்களுக்காக வேட்டையாடப்படுகின்றன.



பெங்குயின், புள்ளிமான், கஸ்தூரிமான், காண்டாமிருகம், யாணை, சிங்கம், கரடி, புலி, காட்டெருமை, சிங்கவால் குரங்கு, பறக்கும் அணில் ஆகிய விலங்குகளில் சில இனங்கள் முற்றிலும் அற்றுப் போகும் நிலையில் இருக்கின்றன.

கடந்த 1000 ஆண்டுகளில் 110 விலங்கினங்களும், 140 பறவையினங்களும் அழிந்துபோய்விட்டன. 300 விலங்கினங்கள் அழியும் நிலையில் உள்ளன.

வனத்தின் பசுமையைச் சிதைக்கும் மான்களை கட்டுப்படுத்த புலிகள் வேண்டும். ஒரு புலியின் எல்லைக்குள் 500 மான்கள் இருக்கும். 10 முதல் 13 ஆண்டுகள் உயிர்வாழும் புலி, ஒரு வருடத்துக்கு 50 மான்களை இரையாகக் கொள்ளும். புலி தின்றுவிட்டுப் போடும் மிச்சங்களைத் தின்றே ஏகப்பட்ட ஜீவராசிகள் உயிர்வாழ்கின்றன. வனத்தின் பாதுகாப்புக்கும், மேம்பாட்டுக்கும் புலிகள் அவசியம்.

வனம் இல்லாமல் விலங்குகள் இல்லை. விலங்குகள் இல்லாமல் பூமியும், மனிதர்களும் இல்லை.

---

# சர்வதேசத்தைப் புரிதல்

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.

இன்று சொல்ஹெய்ம் போன்ற சமாதான ஏற்பாட்டாளர்கள் கூட மனந்தளர்ந்து பிரபாகரனின் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருப்பதில் இருந்து, தமிழர் தரப்பு எதனை விளங்கிக் கொள்கின்றது என்பதுதான் முக்கியமானது. இன்று தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு அவசியம் என்பதில் கரிசனை கொள்ளும் தமிழ்த் தலைமைகள், உண்மையிலேயே அவர்களுக்கு ஏழைத் தமிழ் மக்களின் நலனில் அக்கறையிருப்பின் அவர்கள் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். பிரபாகரனும் அவரால் வழிநடத்தப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் உலகளவில் எந்தவிதமான அனுதாபமோ மரியாதையோ இல்லை என்பதாகும்.

2006 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான செய்தித் தொடர்பாளராக இருந்த காடர்ன் வைஸ், விடுதலைப் புலிகளின் இறுதி நாட்கள் பற்றி ஒரு நூலை எழுதியிருக்கின்றார்.


மக்களைப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் மட்டும் அனுமதித்திருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்திருக்க மாட்டார்கள் என்பதை அந்த நூல் குறிப்பிடுகின்றது. அதற்காக வைஸ் அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்தவில்லை. சொல்ஹெய்மும் அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்தவில்லை. வைஸ் 2011 (Foreign Policy Magazine) வெளிவிவகாரக் கொள்கை சஞ்சிகையில் எழுதிய (Tiger Blood) புலிகளின் இரத்தம் என்னும் கட்டுரையில்



கூறியிருப்பதுதான் விடுதலைப் புலிகள் பற்றிய உலக மதிப்பீடாகும். விடுதலைப் புலிகள் இல்லாத உலகம் சந்தேகமில்லாமல், முன்னரைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது. எனவே இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை முன்னிறுத்தி அரசியல் செய்வோர் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் விடுதலைப் புலிகளை முன்னிலைப்படுத்தி இனிமேல் அரசியல் செய்ய முடியாது. எனவே இப்போது தமிழர்களுக்குத் தேவை ஒரு (De Tiger Politics) புலி - நீக்க அரசியலாகும். எரிக் சொல்ஹேய்மின் கூற்றுக்களிலிருந்து தமிழர் கற்றுக்கொள்வதற்கிருக்கும் மறைபொருள் செய்தி இதுவே.

ஒட்டுமொத்த உலகாலும் நிராகரிக்கப்பட்ட ஒரு நபரை, அந்த நபரின் வழிமுறையை முன்னிலைப்படுத்திக் கொண்டு, உலகத்தின் ஆதரவைப் பெற முடியாது. இதனை விளங்கிக்கொள்வதுதான் சர்வதேச சமூகத்தை விளங்கிக் கொள்வதற்கான முதல் படி. 2011 இல் வெளியிடப்பட்ட அமெரிக்காவின் (Report on counter Terrorism) தீவிரவாத எதிர்ப்பு அறிக்கையிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு, சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில்தான் இணைக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தைச் சுமந்து கொண்டு, பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிக்கும் உலக சக்தியான அமெரிக்காவிடம் எவ்வாறு செல்வது?

---



# கிளி ஏலம்!

ஒரு இடத்தில், கிளிகளை ஒருவன் ஏலம் போட்டு கொண்டிருந்தான். பேசும் கிளிகள் அவை. எல்லாக் கிளிகளும் விற்றுக் கொண்டிருந்தன. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு, ஒரு பேசுங்கிளியை வாங்க விருப்பம். கடைசியில் ஒரு கிளிதான் மிச்சம்.

"யாராவது ஏலம் எடுக்கிறீர்களா?" என்று கேட்டான் கிளி விற்பவன். வந்தவன் ஏலம் கேட்க தொடங்கினான். இவன் கேட்க கேட்க ஏலத் தொகை கூடிக்கொண்டே போனது. ஏலம் முடிந்து கிளியைக் கையில் வாங்கினான். அப்போதுதான் அவனுக்கு சந்தேகம் வந்தது. "இந்தக் கிளி நல்லா பேசுமா?" என்று கேட்டான். ஏலக்காரன் சொன்னான் நல்லா பேசுமாவது? இவ்வளவு நேரம் உங்களுடன் போட்டியா ஏலத் தொகையைக் கூட்டினது இந்தக் கிளிதான்!" என்றான்.

---

# பொருத்தமான ஜோடி யார்?



கற்பனை உளவாளி கதாபாத்திரமான ஜேம்ஸ் பொண்டை மையமாக வைத்து, முதல் முதலாக வெளியான படம், "டாக்டர் நோ" இந்தப் படம், 1962இல், திரைக்கு வந்தது. இதில், ஜேம்ஸ் பொண்டாக ஷோன் கானரி நடித்தார். அவருக்கு ஜோடியாக, உருசுலா ஆண்ட்ரஸ் என்ற நடிகை நடித்தார்.

இதற்குப் பின், 22 ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்கள் வெளியாகி விட்டன. முதல் ஜேம்ஸ் பொண்ட் படம் வெளிவந்து, 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை அடுத்து, ஹொலிவுட்டில் இதை, பிரமாண்டமாக கொண்டாடி வருகின்றனர். பொண்ட் படங்களில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, கார், உடைகள் போன்றவற்றை ஏலம் விட்டு, அறக்கட்டளைகளுக்கு, அந்தப் பணத்தை நன்கொடையாக வழங்குகின்றனர்.

மற்றொரு பக்கம், இதுவரை வெளியான ஜேம்ஸ் பொண்ட் படங்களில், அவருக்கு ஜோடியாக நடித்த நடிகையரில், மிகப் பொருத்தமான ஜோடி யார் என்பது குறித்து, ஒன்லைனில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உலகம் முழுவதிலுமிருந்து, இலட்சக்கணக்கான இரசிகர்கள், இதில் பங்கேற்று, வாக்களித்தனர். இதில், "டாக்டர் நோ" படத்தில் நடித்த உருசுலா ஆண்ட்ரசுக்கு தான், முதலிடம் கிடைத்தது. இரண்டாவது இடம், "டை அனதர் டே" படத்தில், ஜேம்ஸ் பொண்டை காதலித்த, ஹால் பெர்ரிக்கு கிடைத்தது.



# சரஸ்வதி பூசை எதற்கு?



“நீ சரஸ்வதியை வணங்கு, வகுப்பில் முதல் மாணவனாக இருப்பாய். அவள் கல்வி அறிவைத் தருபவள். நீ தொழில் நடத்துபவனாக இருந்தால், அன்றைய தினம் ஆயுதங்களுக்கு பூசை செய். அவள் லாபத்தை அள்ளித் தருவாள்” என்ற அளவில், சுண்டல், பாயசத்தோடு சரஸ்வதி பூசை கொண்டாட்டத்தை முடித்துக் கொள்கிறோம்.

சரஸ்வதி, வெறுமனே படிப்பையும் இலாபத்தையும் வாரி வழங்குவதற்காக உருவானவள் அல்ல. இந்த உலகத்தில் எல்லாத் தெய்வங்களுக்கும் கோவில் இருக்கிறது. ஆனால், இவளுக்கு கோவில் இல்லை, இவளது கணவர் பிரம்மாவுக்கும் இல்லை. சரஸ்வதி மீது அதீத பற்றுக் கொண்ட ஒட்டக் கூத்தர், திருவாரூர் அருகிலுள்ள கூத்தனூரில் ஒரு கோவிலைக் கட்டி வைத்தார். பிரம்மாவுக்கு தனிக் கோவில் கிடையாது. சில பெரிய கோவில்களில் மட்டும் பூசை இல்லாமல் ஒதுங்கி இருப்பார்.

ஏன் இவர்களுக்கு கோவில் இல்லாமல் போனது தெரியுமா? புராணக்கதைப்படி, பிரம்மாவும், விஷ்ணுவும் சிவனின் அடிமுடியைக் காணச் சென்ற போது, பிரம்மா பொய் சொன்னதாகவும், அதனால், அவருக்கு வழிபாடு இல்லாமல் போகட்டும் என்று சிவன் சாபமிட்டதாகவும் சொல்லப்படுகிறது. கடவுளே என்றாலும், பொய் சொல்லக்கூடாது என்ற தத்துவம் மட்டுமே இதன்மூலம் விளக்கப்படுகிறது.

உண்மையில், இதன் தத்துவம் வேறு.

மனிதன் பிறக்கிறான். நிறைய சம்பாதிக்கிறான். தேவையானதை எல்லாம் வாங்குகிறான். சுகங்களை அனுபவிக்கிறான். ஆனால், ஒரு கட்டத்தில் அவனுக்கு அதில் சலிப்பு தட்டி விடுகிறது. கணவனுக்கும், மனைவிக்கும் சண்டை வந்து விட்டாலோ, பிள்ளைகளுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டாலோ போதும்... “கடவுளே... என்னை ஏன் படைத்தாய்?” என்று புலம்புகிறான்.

அவ்வளவு ஏன் போக வேண்டும்? பணக்காரனைப் பார்த்து ஏழை பொறாமைப்படுகிறான் பிறந்தால் அவனைப் போல் பிறந்திருக்க வேண்டும் என்று. இதே போல, ஏழையைப் பார்த்து, பணக்காரன் பொறாமை கொள்கிறான். அந்த ஏழை பழைய சோற்றையும், ஊறுகாயையும் சாப்பிடுகிறான். “உனக்கு பிரஷர், அதெல்லாம் சாப்பிடக் கூடாது...” என்று டாக்டர் சொல்லி விட்டாரே... என்று. இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற நிலையில் தான் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது.

இன்று நீரிழிவு நோய் வந்த பலர், பணத்தை குவித்து வைத்திருந்தாலும், தேநீரைக் கூடருசியாகக் குடிக்க இயலாத நிலையில் தானே இருக்கின்றனர். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், படைத்தவனை திட்டுகிறான் மனிதன்.

விஷ்ணுவை வணங்கினால், “நாராயணா... உன்னை மாதிரி நாலாயிரம் கோடிக்கு நான் அதிபதியாக வேண்டும்...” என்று கேட்கலாம். சிவனை வணங்கினால், “ஐயனே... உன்னைப் போல் வீரச்செயல்கள் புரிய வேண்டும்...” என்று வேண்டலாம். படைப்புக் கடவுளான பிரம்மா விடம் போய், “ஐயா பிரம்மா... எனக்கு இன்னும் ஐந்தாறு பிறவியைக் கொடு...” என்று யாராவது கேட்பார்களா? அதனால் தான், அவருக்கு வழிபாடு இல்லாமல் போய் விட்டது. தன் கணவருக்கு கோவில் இல்லை என்ற காரணத்தால், அவரது மனைவி சரஸ்வதி, தனக்கும் கோவில்கள் தேவையில்லை என்று எண்ணி விட்டாள்.

சரஸ்வதிக்கு கோவில் இல்லாவிட்டாலும், கல்விக்கு அவளை அதிபதியாக்கி விட்டதால், வருடத்தில் ஒருநாள் நம் இல்லங்களில் எழுந்தருளச் செய்கிறோம். சரஸ்வதி பூசை நன்னாளில், நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இதுதான்!


படித்தால் மட்டும் போதாது. படிப்பின் நோக்கம், பிறருக்காக நம் வாழ்வை தியாகம் செய்வது தான் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மாணவச் செல்வங்களே... நன்றாகப் படியுங்கள். படிப்பு என்பது, சம்பாதிக்க மட்டுமே என்ற குறுகிய நோக்கோடு நிறுத்தி விடாதீர்கள். குடும்பத்திற்கு, நண்பர்களுக்கு, சமுதாயத்திற்கு உதவும் வகையில், தியாகச் செயல்களைச் செய்யுங்கள். சரஸ்வதி பூஜையன்று நீங்கள் எடுக்க வேண்டிய உறுதி இதுதான்!

# இருந்த இடத்து வேலை ஆபத்து!

“அலுவலகம் போனால், சீற்றை விட்டு எழுந்திருக்க வேண்டாம். இருந்த இடத்து வேலைதான்” என்று இனி பெருமையடிக்காதீர்கள். அதிக நேரம் கதிரையில் அமர்ந்து கம்பியூட்டருடன் மல்லுக்கட்டும் ஊழியர்களை நீரிழிவு நோய், இதய நோய்கள் தாக்கும் என்கிறது சமீபத்திய ஆராய்ச்சி.

அலுவலக வேலையால் ஏற்படும் உடல்நல கோளாறுகள் தொடர்பாக அவுஸ்ரேலியாவின் சிட்னி பல்கலைக் கழகம் சமீபத்தில் ஆய்வு நடத்தியது. இதுபற்றி ஆய்வுக் குழுத் தலைவர் கரின் க்ரிபித்ஸ் கூறியதாவது:




அரசு அலுவலகங்களிலுள்ள 1000 ஊழியர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. சராசரியாக தினமும் 8 மணி நேரம் அல்லது அதற்கு மேல் கம்ப்யூட்டர் பணி செய்பவர்களில் 85 சதவீதம் பேர் கழுத்து வலி இருப்பதாக கூறினர். தோள்பட்டை வலி இருப்பதாக 75 வீதம் பேரும், முதுகு வலி இருப்பதாக 70 வீதம் பேரும் கூறியுள்ளனர்.

அதிக நேரம் இருந்து வேலை பார்ப்பதால் உடல்நலம் பாதிக்கப்படுகிறது என்று 1980களில் இருந்தே மருத்துவ ஆய்வுகள் எச்சரித்து வருகின்றன. இதையடுத்து, ஊழியர்கள் நின்றபடி, அமர்ந்தபடி, சோபாவில் சாய்ந்தபடி வேலை பார்க்கும் வசதிகளை சில முன்னணி நிறுவனங்கள் அமுல்படுத்தின. அலுவலகங்களில் கம்பியூட்டர் இருக்கைகளை மாற்றி அமைத்தனர். இதன் பிறகு, ஊழியர்களின் கழுத்து, முதுகு வலிகள் ஓரளவு குறைந்தன. ஆனாலும் வலி பிரச்சினைகள் முழுவதுமாக தீரவில்லை.

ஆண்டுகள் ஆகஆக, இந்தப் பிரச்சினை அதிகரித்து வருகிறது. முன்பெல்லாம் எல்லா வேலைக்கும் இடம் விட்டு நகர வேண்டி இருந்தது. போன், செல்போன், கம்பியூட்டர், இன்டர்நெட் வசதிகள் வந்த பிறகு நகர்தல் குறைந்து வருகிறது. இருந்த இடத்திலேயே எல்லா வேலைகளும் முடிகின்றன. கூட்டங்கள்கூட கொன்பிரன்ஸ் கோல் அல்லது வீடியோ கொன்பரன்சில் முடித்து விடுகின்றனர்.

அதிக நேரம் அமர்ந்திருப்பதால் ஏற்படும் பாதிப்புகளை “சேர் டிசீஸ்” (நாற்காலி நோய்கள்) என்கிறது மருத்துவ உலகம். நாற்காலியை மாற்றுவதால், தரமான நாற்காலி போட்டுக் கொள்வதால் இப்பிரச்சினை தீராது. வெகு நேரம் அமர்ந்திருப்பதை தவிர்ப்பது அவசியம். இல்லாவிட்டால் உடல் பருமன், உயர்ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதய நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது. நிர்வாக பொறுப்பில் இருப்பவர்கள், உயர் அதிகாரிகள் என்றால் நோய் இன்னும் கடுமையாகத் தாக்கும்.

# நடிகையின் சுற்றுச்சூழல் அக்கறை



ஹொலிவுட்டின் பிரபல நடிகை எமிலி பிளன்ட். நடிப்புடன், சுற்றுச் சூழலை பாதுகாப்பதிலும், இவருக்கு ஆர்வம் அதிகம். சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு முகாம்களில், தானாகச் சென்று பங்கேற்கிறார்.

இவர், அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில், இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில், 28 கோடி ரூபா செலவில், மிகப் பெரிய பங்களாவை கட்டியுள்ளார். சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் இயற்கையான வகையில், இந்த பங்களா கட்டப் பட்டுள்ளது. இதற்காக, பங்களாவின் ஒரு பகுதியில், சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இயற்கைக்கு பாதிப்பு ஏற்படுத்த கூடிய எந்த பொருட்களும், இந்த பங்களாவில் இல்லை. ஐந்து ஏக்கர் பரப்பில், நான்கு படுக்கை' அறைகளுடன் கூடிய இந்த பங்களாவில், சமீபத்தில்தான் குடியேறினார் எமிலி. “நடிப்பில் மட்டுமல்லாமல், சுற்றுச் சூழலை பாதுகாப்பதிலும், மற்றவர்களுக்கு முன் உதாரணமாக திகழ வேண்டும் என்பதற்காகவே, இந்த பங்களாவை கட்டியுள்ளேன்...” என்கிறார் எமிலி.


# உங்களுக்கு எங்கே மச்சம்?

மனித உடலில் காணப்படும் மச்சங்களைக் கொண்டு பலன்களைக் கூறும் வழக்கம் சீனர்களிடம் பிரபலமான சோதிட முறையாகும். முதலில் உங்களிடமுள்ள மச்சங்கள் எங்கெங்கே என்று தெரிந்துகொள்ளுங்கள்.

**பலன்கள் இதோ:**

முகவாய்க்கட்டை - சுபிட்சம்
தொண்டை - அதிர்ஷ்டம்
பின்புற கழுத்து - சிறைத் தண்டனை கிட்டலாம்
மூக்கு - ஊர் சுற்றி
உதடு - சாப்பாட்டுப் பிரியன், நல்ல பேச்சாளர்
வலது தோள், கை, கால் - அதிர்ஷ்டம்
இடது தோள், கை, கால் - தரித்திரம்
வயிறு - பலம்
இதயத்தின் இடதுபுறம் - தீய குணம்
வலதுபுற மார்பு - வறுமை
வலதுபுற கீழ்த்தொடை - துரதிஷ்டம்
இடதுபுற முழங்கால், இடது கை - பல குழந்தைகள்
புருவம் - நல்ல வாழ்க்கைத்துணை
நெற்றி வலதுபுறம் - பேரதிர்ஷ்டம், கௌரவம்
நெற்றி இடதுபுறம் - துரதிர்ஷ்டம், நுண்ணறிவு
நெற்றியின் நடுவில் - கொடூரமான நெஞ்சம்

முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரை மச்சங்கள் நிறைந்து இருப்பின் இடைக்காலத்தில் தொல்லைகளும், பிற்காலத்தில் ஐஸ்வரியமும், வசதியும் கூடும்.



# மனைப்பொருளாதார அபிவிருத்தி; மாத்தறையில் வாழ்வெழுச்சிக் கண்காட்சி



(கொழும்பு)

பத்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத் திற்கமைய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் மாவட்டங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) கண்காட்சி அமைசசர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாத்தறை புனித தோமஸ் ஆண்கள் கல்லூரியில் மேற்படி கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளை மேம்படுத்தும் நோக்கில் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் இவ் வாழ்வெழுச்சி கண்காட்சி நடாததப்பட்டு வருகின்றது.

இக்கண்காட்சியில் 50வரையான தொழில்சார் நிறுவனங்களின் 75இற்கு மேற்பட்ட காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இவற்றை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் பார்வையிட்டு அவைதொடர்பான விளக்கங்களையும் பெற்றுள்ளனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் கல்லூரியின் பிரதான வாயிலிலிருந்து மாணவர்களின் இசை நடனத்துடன் மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டதை அடுத்து மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது.


தொடர்ந்து மாத்தறை மாவட்ட அரச அதிபர் திருமதி டபிள்யு. கே. கே. அத்தபத்து தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 'வாழ்வின் எழுச்சி' திட்டத்தின் நோக்கம் அதன் செயற்திட்டங்கள் அதனால் மக்கள் பெறக்கூடிய பயன்கள் நன்மைகள் தொடர்பான விளக்கங்களை பாராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி நிகழ்த்தினார்.

தொடர்ந்து தென்மாகாண கல்வி அமைச்சர் சந்திமா ராசபுத்திர, அமைச்சர் டலஸ் அழகபெரும ஆகியோர் உரையாற்றியதை அடுத்து, காட்சிகூடங்களை அமைச்சர்கள் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டதுடன், அவைதொடர்பில் துறைசார்ந்தவர்களுடனும் கலந்துரையாடிக் கேட்டறிந்து கொண்டனர்.

மகிந்த சிந்தனைக்கு அமைவாக பாராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் 'வாழ்வின் எழுச்சி' கண்காட்சி 23ஆவது மாவட்டமாக மாத்தறையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாகாணசபை உறுப்பினர்களான சரத் யாப்பா அபேவர்த்தன, அனுரகுணரட்ண, டி.டபிள்யு.புண்ணியசிங்க, காஞ்சன விஜேசேகர உள்ளிட்ட அமைச்சினதும் ஏனைய திணைகளங்களினதும் துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலின் போது டெங்கு ஒழிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பல்லூடகம் மூலம் காட்சிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதன்போது யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பொதுச்சுகாதாரப் பொறியியற் பிரிவின் மேற்பார்வையாளர்கள், வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ் வரன், உள்ளிட்ட துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சுயதொழிலுக்கான கடன் வசதி

சமூகமயப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி உள்ளிட்ட குழுவினர் முல் லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்டு சுமார் 400 முன்னாள் போராளிகளைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். இவர்களில் 190 பேருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சுயதொழிலுக்கான கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாகாண மட்ட பரீட்சைகள்

வடக்கு மாகாண, மாகாணக்கல்வித்திணைக்களம் இவ்வருடம் க.பொ.த.(சாதாரணம்) கற்கும் மாணவருக்கான முன்னோடிப் பரீட்சைகளை இவ்வருடம் இம்மாத இறுதியிலேயே நடாத்த திட்டமிட்டுள்ளது. இவ் அடிப்படையில் பின் வரும் நேர அட்டவணையில பரீட்சைகள் நடைபெறவுள்ளன. 30.10.2012 செவ்வாய் முதன்மொழி (தமிழ்/சிங்களம்), 31.10.2012 புதன் கணிதம் பகுதி I. II, 01.11.2012 வியாழன் விஞ்ஞானம் II, I, 02.11.2012 வெள்ளி ஆங்கிலம் I II, 03.11.2012 சனி வரலாறு II, I

இதே நேரம் இவ்வருட இறுதியில் நடாத்தப்படவுள்ள தரம் 9 மாகாணமட்ட பரீட்சையின் நேர அட்டவணையினையும் வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளது.

அவ் அடிப்படையில் பின்வரும் நேர அட்டவணையில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன, 19.11.2012 திங்கள் முதல் மொழி தமிழ்/சிங்களம், 20.11.2012 செவ்வாய் கணிதம், 21.11.2012 புதன் வரலாறு, 22.11.2012 வியாழன் விஞ்ஞானம், 23.11.2012 வெள்ளி ஆங்கிலம். மேற்படி விபரங்களினை வடமாகாணத்திற்கு உட்பட்ட சகலக் கல்வி வலயங்களுக்கும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (42)

# மலையகத்தில் கடும் மழை; அவசர அனர்த்த எச்சரிக்கை

(கொழும்பு)

மலையகத்தில் கண்டியின் பல பகுதிகளில் அறிவிக்கப்பட்டிருந்த மண்சரிவு அனர்த்த நிலைமை எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

ஹேவாஹெட்ட, அக்குரனை, கங்கவட்டகோரல, உடுநுவர, யட்டிநுவர, ஹரிஸ்பத்துவ, தும்பனை மற்றும் பாத்ததும்பர ஆகிய பகுதிகளிலே மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

காசல்ரி நீர்தேக்கத்தை அண்மித்த நோர்வூட் பகுதியில் பொழியும் கடும் மழை காரணமாக கெசெல்கமுவ ஓயாவின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.


இந்த நிலைமையைக் கருத்திற் கொண்டு நோர்வூட்டில் தாழ்நிலப்பகுதிகளில் வாழும் மக்களை தற்போது பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதுதவிர, கெசெல்கமுவ ஓயாவும் கரைபுரண்டு ஓடுவதால் நோர்வூட் கிரிமண்டல வீதியில் உள்ள 15 வீடுகள் பகுதியளவில் நீரில் மூழ்கியுள்ளன. மலையகத்தின் பல பகுதிகளில் அதிக மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், மண்சரிவு அபாயங்களும் தோன்றியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதுதவிர, வடமத்திய மாகாணத்திலும் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்த பல சிறியவாவிகள் நிரப்பியுள்ளன. குறிப்பாக அனுராதபுரம் மாவட்டத்திலேயே அதிகளவிலான வாவிகள் நிரம்பி வழிவதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் மழை வீழ்ச்சி கிடைக்குமாயின் பெரிய குளங்களும் நிரம்பி வழிய வாய்ப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்யக் கூடிய ஏதுநிலை இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இதேவேளை, அனர்த்தத்தை கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடரபிலான அறிக்கை அனர்த் தகட்டுப்பாட்டு ஆசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.



கைதடி சரஸ்வதி இளைஞர் கழகத்தால் பல் வேறு சமூக நலப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள கழக அங்கத்தவர்களைக் காணலாம்.

(படம்: அ.அனித்தா)

# துன்பங்களைச் சுமக்கும் சமூகமாக வாழமுடியாது



ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தும் கிராமங்களிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அக்கராயனில் பத்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக்கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் மிகச்சிறப்பாகவும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையை ஊட்டும் வகையிலும் செயற்பட்டு வருகின்றன. அதில் இம்மாவட்ட பெற்றோர்களும் ஆர்வம் காட்டுகின்றார்கள். எனவே தொடர்ந்தும் இவ்வாறு திறக்கப்படும் முன்பள்ளிகளை மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் கடந்த காலங்களில் அனுபவித்த வலிகள் துன்பங்கள் அனைத்திற்கும் மூல காரணமாக விளங்கியது கல்வியே. ஆனால் தொடர்ந்தும் நாம் துன்பங்களை சுமக்கின்ற சமூகமாக வாழமுடியாது. ஆகவே நாம் கல்வியால் மேம்பட்ட சமூகமாக மாற்றம்பெற வேண்டும். அந்த இலக்கினை எட்டுவதற்காக கிடைக்கப்பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தையும் வளங்களையும் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

ஸ்கந்தபுரம் கிராமஅபிவிருத்திச்சங்கத்தலைவரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் சபாநாயகம், மீள்எழுச்சித்திட்டம் மற்றும் துரித மீட்சித்திட்டத்தின் பிரதித்திட்டப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன் ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் கரைச்சி பிரதேச செயலக தலைமைப்பீட கிராமசேவகர் மகேந்திரம் ஆகியோரும் மற்றும் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களும் பொது அமைப்புக்களின் பிரிதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## 10 நாட்கள் செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்தில் 'வாழ்க்கைத் திறனொன்றாக ஆங்கிலம்' வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயல்முனைப்பு வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக அரசாங்க பாடசாலைகளில் வாழ்க்கைத் திறனொன்றாக ஆங்கிலம் என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் பேசும், எழுதும் ஆற்றல்களை மாணவர்களுக்கு விருத்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேற்படி விடயம் தொடர்பான செயலமர்வு நேற்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும 3ஆம் திகதிவரையிலுமாக பத்து நாட்கள் மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெற உள்ளது.

இச் செயலமர்வுக்கு துணுக்காய் வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் அல்லது ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவர் வீதம் அழைக்கப்பட்டுள்ளனர். அழைக்கப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்ரன் ஊடாக ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் சோ.தியாகராசா கேட்டுக்கொண்டுள்ளார். (42)

# நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய்

## சுன்னாகத்தில் ஆபத்து

சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் கழிவு ஒயில் புகுவதினால் சுத்தமான குடிநீரைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக கழிவு ஒயில், கிணறுகளில் புகுவது சம்பந்தமாக பிரதேச சபை, பிரதேச செயலகம், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உட்பட பல இடங்களில் முறைப்பாடு செய்தும், உடனடியாக நிலைமையை உணர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். இது வரைக்கும் இலங்கை மின்சார சபைக்கு பலமுறை அறிவித்திருந்தும் மாற்று நடவடிக்கைகள் எவையும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

# கணகாவா ஈராண்டு உலக சித்திரப்போட்டி

(அச்சுவேலி)

ஜப்பான் கணகாவா சர்வதேச அமைப்பின் இரு வருடங்களாக ஒழுங்கு செய்யப்படும் கணகாவா ஈராண்டு உலக சித்திரப் போட்டியின் 17 ஆவது சித்திரப் போட்டிக்காக நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடமிருந்து இலங்கை யுனஸ்கோ தேசிய ஆணைக் குழுச் சபையினால் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

போட்டியாளர்கள் 2012 ஏப்ரல் மாதம் முதலாம் திகதியன்று 4 வயதை விடக் குறையாத மற்றும் 15 வய்தை விட மேற்படாது இருக்க வேண்டியதுடன் ஆக்கங்களை 54 x 38 சென்ரி மீற்றர் அளவில் நீர் வர்ணம், எண்ணெய் வர்ணம், கிரயோன், பெஸ்டர், கொலாஜ் போன்றவற்றைப் பயன்படுத்தி சொந்த ஆக்கமாக தங்களுக்கு விரும்பிய எத் தொனிப்பொருளிலும் சமர்ப்பிக்க முடியும்.

இத்தகான ஆக்கங்கள் யாவும் 31.10.2012 திகதிக்கு முனனர் செயலாளர் நாயகம், இலங்கை யுனஸ்கோ தேசிய ஆணைக் குழுச் சபை, கல்வி அமைச்சு, 5 ஆவது மாடி, இசுறுபாய, பத்தர முல்ல என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சகல ஆக்கங்களும் ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் அவர்களினால் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதில் அதி சிறந்த 03 வெற்றியாளர்களும், 50 விசேட வெற்றியாளர்களும், 465 தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். இப்போட்டியில் பங்கபற்றுவதற்காக போட்டியாளர்களுக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மாதிரி விண்ணப்பப் படிவங்கள் அற்ற ஆக்கங்கள் நிராகரிக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

# கல்விக் கருத்தரங்குகள்

(அச்சுவேலி)

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 11 இல் கல்வி பயின்று வரும் மாணவர்களின் பொதுப்பரீட்சை அடைவு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் யாழ். கல்வி வலயத்தினால் விசேட கல்விக் கருத்தரங்குகள் ஒழுங்கமைத்து நடாத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்தரங்கானது கணிதம் , விஞ்ஞானம், ஆங்கிலம், புவியியல், வரலாறு ஆகிய முக்கிய பாடங்களை உள்ளடக்கியதாக கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இக்கருத்தரங்கிற்கான வினாத்தாள்கள் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டு கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ்வழிகாட்டல் கருத்தரங்கானது மாணவர்கள் பங்குபற்றுவதற்கு இலகுவான வகையில் குறிப்பிட்ட சில பாடசாலைகளை ஒவ்வோர் குழுமங்களாக ஒன்றிணைத்து அப்பாடசாலைகளில் கற்பித்து வரும் பாட ஆசிரியர்களின் ஆளணியினை கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது. (03).

# பதிவிறக்கப் பெட்டகம்

மனைவி முட்டைப் பொரியல் தயாரித்துக் கொண்டிருந்த போது சமையலறைக்குள் நுழைந்த கணவன், “கவனம்! இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்று” என்றான். கூடவே, “என்ன சமையல் செய்கிறாய்? அதை திருப்பு; இன்னும் கொஞ்சம் முறுகலாக வதக்கு. கடவுளே! இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்று. அடிப் பிடிக்கிறது பார்! கவனம்! கவனம்!”

“இன்னும் கொஞ்சம் வதக்கு, உப்பு போட மறக்காதே. கொஞ்சமா உப்பு போடு” என்று அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டே சொன்னான். பொறுமை இழந்த மனைவி கேட்டாள், “என்ன ஆச்சு உங்களுக்கு? ஒரு முட்டைப் பொரியலைக் கூடச் செய்ய எனக்குத் தெரியாதா?”

கணவன் பொறுமையாகச் சொன்னான், “இப்ப தெரிகிறதா? நான் கார் ஓட்டும்போது பக்கத்தில் இருந்து கொண்டு அடிக்கடி குறுக்கிட்டு எனக்கே கற்றுக் கொடுக்கிறாயே? அப்ப எனக்கு எப்படி இருக்கும்?”

*** *** *** *** *** *** *** ***

மரணப் படுக்கையில் இருந்த ஸ்மித், இறந்தவுடன் தன்னிடமுள்ள ஏராளமான பணத்தில் ஒரு பகுதியை சவப்பெட்டிக்குள் வைத்து கொண்டு போக நினைத்தார். தனது நம்பிக்கைக்குரிய வழக்கறிஞர், டாக்டர், மதகுரு ஆகியோரை அழைத்து மூவரிடமும் ஸ்மித், “உங்களிடம் தனித்தனியாக 30 ஆயிரம் டொலர்களைக் கொடுக்கிறேன். என்னை அடக்கம் செய்யும் போது எப்படியாவது இதை வைத்துவிட்டால் அதை மேல் உலகத்திற்கு எடுத்துச் செல்வேன்” என்றார்.

மூவரும் ஒப்புக்கொண்டு பணத்தைப் பெற்றுக் கொண்டனர். சவ அடக்கத்தின்போது மூவரும் ஆளுக்கொரு கவரை பெட்டிக்குள் வைத்தனர். கல்லறையை நோக்கிச் செல்லும்போது காரில் அமர்ந்திருந்த மதகுரு சொன்னார்.

“தன்னுடைய வாழ்நாளுக்குள் தேவாலயத்திற்கு ஏதாவது என் மூலமாக செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தார் ஸ்மித். இந்த தேவாலயத்தில் ஞானஸ்நானம் செய்யும் பகுதி மிகவும் மோசமாக இருந்ததால் அதை புதுப்பிக்க அவர் கொடுத்த பணத்தில் 10 ஆயிரம் டொலர்களை எடுத்துக்கொண்டு 20 ஆயிரம் டொலரை மட்டும் சவப்பெட்டிக்குள் வைத்தேன்”

இதைக் கேட்ட டாக்டர் கூறினார், “ஸ்மித்துக்கு வந்த நோயைப் பற்றி அறிந்து கொள்ள என்னிடம் நவீன கருவி ஏதும் இல்லை. அதன் விலையை விசாரித்தபோது 20 ஆயிரம் டொலர் ஆகுமென்று கூறினார்கள். அவர் கொடுத்த பணத்தில்தான் அந்த இயந்திரத்தை வாங்கியுள்ளேன். இனி வரும் நோயாளிகளுக்கு பயன்படுத்த வசதியாக இருக்கும். ஸ்மித் இருந்தால் நிச்சயம் இதை அனுமதித்திருப்பார். ஆகவே 10 ஆயிரம் டொலர்களை மட்டுமே கவரில் வைத்து சவப்பெட்டியில் வைத்துள்ளேன்” என்றார்.

இதைக் கேட்ட வழக்கறிஞர் கூறினார், “இப்படிச் செய்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா? அவர் கொடுத்த 30 ஆயிரம் டொலருக்கு நான் அவர் பெயருக்கு ஒரு செக் எழுதி கவரில் வைத்து சவப்பெட்டியில் வைத்துவிட்டேன்.”

*** *** *** *** *** *** *** ***

மனைவியிடம் கணவன் சொன்னான், “என்னுடைய நண்பன் பகல் சாப்பாட்டிற்கு வருவதாகக் கூறியிருக்கிறான்” மனைவி கோபத்துடன் சொன்னாள், “உங்களுக்கென்ன பைத்தியமா? இந்த வீட்டைப் பார்த்தீர்களா? எவ்வளவு அலங்கோலமாக இருக்கிறது. இன்னும் சந்தைக்குக் கூடப் போகவில்லை. பாத்திரங்களெல்லாம் துலக்கவில்லை. நல்ல ருசியான சாப்பாட்டை தயார் செய்ய முடியுமென்ற நம்பிக்கை எனக்கில்லை”

“எனக்கும் தெரியும்” என்றான் கணவன். “தெரிந்தும் ஏன் உங்கள் நண்பரை வீட்டிற்கு அழைத்தீர்கள்?”

“என்ன செய்வது? அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறான். வந்து பார்க்கட்டுமே என்றுதான் அழைத்தேன்” என்றான் கணவன்.

*** *** *** *** *** *** *** ***

மகன்: அப்பா நான் கணக்கிலே புலி...

அப்பா: பிறகு ஏன்ரா, கணக்கிலே முட்டை வாங்கியிருக்கிறாய்..?

மகன்: புலி இப்ப பதுங்கியிருக்கு...

*** *** *** *** *** *** *** ***

ஒருவர்: அந்தக் கதாசிரியர் ஏன் ஒவ்வொரு முட்டையா உடைச்சுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்..?

மற்றவர்: கதைக்கு நல்ல “கரு'வைத் தேடிக்கொண்டிருக்கிறாராம்..!

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

# G.C.E. (O/L) Examination model Paper

**தமிழ்மொழியும் இலக்கியமும்** 22 T I ஆசிரியர் : S.S.ஆனந்தன்

## பகுதி I

**இல . 2**

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) ஒவ்வொரு தடவையும் நிஜம் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது. இங்கு நிஜம் என்பதன் பொருள்
 1) மெய் 2) பொய் 3) பேசுதல் 4) குற்றம்

2) "வையகமெல்லாம் எமதென் றெழுதுமே மொய்யிலை வேல் மாறன் களிறு" இங்கு மொய் என்பதன் கருத்தாவது
 1) மொய்த்தல் 2) மென்மை 3) வலிமை 4) பெரிய

3) "விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்க" இங்கு வெள்கி என்பதன் ஒத்தகருத்து
 1) மயக்கம் 2) தயக்கம் 3) வெட்கம் 4) வெறுப்பு

4) அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும், தூற்றும் என்பதன் எதிர்க்கருத்து
 1) இகழும் 2) பழிக்கும் 3) தூவுதல் 4) போற்றுதல்

5) அரசிளங்குமரி பாங்கியுடன் நந்தவனம் சென்றாள். பாங்கி என்பதன் ஆண்பாற் சொல்
 1) கணவன் 2) பாங்கன் 3) தோழன் 4) தோழி

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்வது
 1) மரூஉ 2) இடக்கரடக்கல்
 3) இலக்கணப்போலி 4) ஐம்பொருள்

7) விமலன் உலாந்தாவில் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான். இங்கு உலாந்தா என்பது
 1) ஒல்லாந்து 2) வடசொல் 3) போர்த்துக்கேயர் 4) ஆங்கிலம்

8) நம் முன்னோர் தந்த பிரோவேப்ஸ் (Proverbs) வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் பிரோவேப்ஸ் என்பதன் தமிழ் வடிவம்
 1) பொக்கிஷம் 2) பழமொழிகள்
 3) உவமைகள் 4) பழக்கவழக்கங்கள்

9) கடல் கொந்தளிப்பை உணர்த்தும் மீனவச் சமூகத்தின் கிளை மொழி
 1) செக்கல் 2) அம்மாறு 3) வெள்ளிடி 4) அணியம்

10) வெளிப்படையாகக் கேட்டல் என்னும் பொருளைத் தரும் மரபுத் தொடர்
 1) வாய் மூத்தல் 2) வாய் திறத்தல்
 3) வாயைப் பூட்டுதல் 4) வாய் விடுதல்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

11) புல்லின் இலைக்குரிய பெயர் தாள் - பனையின் இலைக்குரிய பெயர்
 1) இலை 2) ஓலை 3) குலை 4) கன்று

12) முகமன் கூறிக் கிளப்பி விடுதல் என்ற பொருள் தரும் மரபுத் தொடர்.
 1) வாலாட்டுதல் 2) வால் முளைத்தல்
 3) வால் வீசுதல் 4) வால் காட்டுதல்

13) யானை பிளிறும் என்பது போல் பன்றி
 1) கதறும் 2) உறுமும் 3) கத்தும் 4) கனைக்கும்

14) ஒன்றுபோல் இருக்கும் வேறொன்று
 1) அசல் 2) போலி 3) உருவம் 4) குற்றி

15) ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது என்னும் பழமொழியின் பொருள் கொண்ட இன்னொரு பழமொழி
 1) சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது.
 2) கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்.
 3) அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
 4) பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது.

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) பெரியவர் தான் தொலைத்த பொருளைக் கண்டுபிடித்துக் கொடுத்த இளைஞனுக்கு .................... வழங்கினார்.
 1) வேதனம் 2) கூலி 3) சம்மானம் 4) இழப்பீடு

17) ஒருவர் இறந்த பின் அவரைப் பற்றிப் பாடப்படும் பாடல் ............ எனப்படும்.
 1) கவிதை 2) செய்யுள் 3) ஒப்பாரி 4) கிரியை

18) ஆணைக்குழுவின் .................... மூலம் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும்.
 1) சுற்றறிக்கை 2) செய்தி 3) அறிக்கை 4) செயற்பாடு

19) ............... அமைச்சு செயலாளர்கள் பத்துப் பேரைச் சேவையில் இருந்து நீக்க அரசு தீர்மானித்துள்ளது.
 1) வினைத்திறனற்ற 2) செயற்றிறனுடைய
 3) சேவை செய்யாத 4) பொறுப்பற்ற

20) கனடா நகர சபை தமிழர்களின் தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகக் கொண்டாட
 1) உறுதியளித்துள்ளது 2) ஏற்பாடு செய்துள்ளது
 3) பொறுப்பேற்றுள்ளது 4) அங்கீகரித்துள்ளது

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) தரப்பட்ட சொல் வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
 1) வினைமுற்று - படித்தான், வந்தேன், நடித்தோம்
 2) வினையெச்சம்- வந்த, படித்து, ஓடி
 3) பெயரெச்சம் - ஆடும், பாடிய, வாசித்த
 4) தொழிற்பெயர்- வாசித்தல், நோக்காடு, விளையாடுதல்.

22) பின்வருவனவற்றுள் பண்புத் தொகையாவது
 1) முக்குணம் 2) முருகக் கடவுள் 3) பவளவாய் 4) கடிநாய்

23) வினைச்சொல்லின் சிறப்பிலக்கணமாவது
 1) வேற்றுமை ஏற்றல் 2) செயலைக் காட்டல்
 3) காலம் காட்டல் 4) பயனைக்கூறல்

24) படித்தனன் என்பதில் இடம்பெறும் சாரியை ஆவது
 1) படி 2) த் 3) அன் 4) ஆன்

25) பின்வருவனவற்றுள் பயனிலை தொக்கி நிற்கும் வாக்கியமாவது
 1) புண்ணியம் செய்தால் நன்மை 2) செய்வன திருந்தச் செய்
 3) ஒன்று சொல்லுகிறேன் 4) கதவைத் தட்டுங்கள்

26) ஆசிரியர் கணித பாடத்தை கற்பித்தார். கற்பித்தார் என்பது.
 1) செய்வினை 2) செயப்பாட்டு வினை
 3) ஏவல் வினை 4) பிறவினை

27) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாவது,
 1) படித்தான் 2) அழுதான் 3) வாசித்தோம் 4) சாப்பிட்டது

28) இயல்பு புணர்ச்சியாவது
 1) கடலலை 2) மணிக்கூடு 3) வர்த்தக வலயம் 4) பாற்குடம்

29) திருக்கை மீனின் விலை உயர்ந்தது. திருக்கை என்பது
 1) உருவக அணி 2) உவமை அணி
 3) சிலேடை அணி 4) தற்குறிப்பேற்றணி

30) பின்வருவனவற்றுள் சுட்டுப்பெயர் அல்லாதது
 1) தந்தியடி 2) கட்டுரை 3) வானொலி 4) நீரேரி

**பின்வரும் வாக்கியங்களுள் இலக்கண வழுவற்ற வாக்கியங்களைத் தெரிவு செய்க.**

31) 1) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவனவாக உள்ளன.
 2) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவதாக உள்ளன.
 3) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவனவாக உள்ளது.
 4) நீதிப்பாடல்கள் எமக்கு அறிவூட்டுவதாய் உள்ளன.

32) 1) நாம் நாளை சுற்றுலா செய்வேன்.
 2) நாம் நாளை சுற்றுலா செல்கிறேன்.
 3) நாம் நாளை சுற்றுலா சென்றோம்.
 4) நாம் நாளை சுற்றுலா செல்வோம்.

**பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க**

33) 1) செய்யுள் - கவிதை வெளிப்பாட்டுக்கு உதவும்.
 2) செய்யுல் - கவிதை வெளிப்பாட்டுக்கு உதவும்.
 3) செய்யுள் - கவிதை வெலிப்பாட்டுக்கு உதவும்.
 4) செய்யுல் - கவிதை வெலிப்பாட்டுக்கு உதவும்.

34) 1) உருபுகளை இனைத்தே பயன்படுத்துகின்றோம்.
 2) உறுபுகளை இனைத்தே பயன்படுத்துகின்றோம்.
 3) உறுபுகளை இணைத்தே பயன்படுத்துகின்றோம்.
 4) உருபுகளை இணைத்தே பயன்படுத்துகின்றோம்.

35) 1) விண்ணியலைப் பற்றி அறியலாம்.
2) வின்னியலைப் பற்றி அறியலாம்.
3) விண்ணியலைப் பற்ற அறியலாம்
4) விண்ணியளைப் பற்றி அறியலாம்.

**பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்ய.**

அலைகடலின் துரும்பானேன் ; அடவி மீதில்
அகப்பட்ட சேயானேன் ; அனலைக் கக்கும்
உலையிட்ட மெழுகானேன் ; ஆலை வாயில்
உட்புகுந்த கரும்பானேன் ; கொம்பில் லாத
நிலையிழந்த கொடியாகி ; வனத்தில் நின்றே
நிட்டுலப் படுகின்றேன் ; அம்மா தாயே!
கொலையிலிருந்து என்னை மீக்க ஓடி வாராய்

36) அடவி மீதில் அகப்பட்ட சேயானேன். இங்கு சேய் என்பது
1) சிறுவன் 2) இளமகள் 3) குமரன் 4) மனைவி

37) தன்னை மீக்க வரும்படி அழைப்பது
1)தந்தையை 2) தலைவனை 3) தாயை 4) மகளை

38) இங்கு கூற விரும்பிய கருத்திற்கு ஒவ்வாத கருத்தாவது
1) துன்பத்தின் அவல நிலை கூறப்படல்.
2) துன்பத்தின் மிகுதியை ஒப்பீட்டு முறையில் கூறல்.
3) இளமகளின் அதீத துயர் வெளிக்காட்டல்.
4) துன்ப நிலையில் இருந்து இன்பம் காணல்.

39) ஆலைவாயில் அகப்பட்ட கரும்பு என்பதை உணர்த்தும் வேறொரு சொற்றொடர்
1) வெள்ளிடை மலை போல 2) குன்றின் மீது இட்ட ஒளி போல
3) குடத்துள் விளக்கு போல 4) கடலில் அகப்பட்ட தும்பு போல

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் வரும் வாக்கிய வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40) அ. அவர்கள் கூறியிருக்கும் உவமைகளைக் கண்டால் உண்மை விளங்கும்.
ஆ. அந்த நாளைய புலவர்கள் பழமைக்கு அடிமையாகாது வெற்றி பெற முயன்றார்கள்.
இ. சங்ககாலம் ஒரு புரட்சிக் காலம்.
ஈ. சங்கப் புலவர்களை நாமும் போற்றிடுவோம்.
உ. தாங்கள் நேரிற் கண்ட போர்களையும், ஊர்களையும் உவமை கூறினர்.
1) இ, ஈ, அ, ஆ, உ 2) இ, ஆ, அ, உ, ஈ
3) ஈ, அ, இ, ஆ, உ 4) இ, உ, அ, ஆ, ஈ

## பகுதி II

**01) சுருக்கமான விடை தருக**

i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்

ii) தன்வினை என்றால் என்ன?

iii) அவர்கள் முன்பு புதல்வன் ஊர்ந்து களித்து விளையாடி இருக்கின்றான். இந்த வாக்கியத்தை திருத்தமாக எழுதுக.

iv) வர்ணனையாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு எழுதுக.

v) அயோக்கியன், அபகரி, அசூயை, அபூர்வம் ஆகிய வடமொழிச் சொற்களின் தமிழ் வடிவத்தினை எழுதுக.

vi) ஆசைகாட்டி மோசஞ் செய்து, மாட மாளிகை கூட கோபுரம் ஆகிய அருஞ் சொற்றொடர்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.

vii) பெயர்ச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் உ + ம் தருக.

viii) குறிப்பொன்றை விரித்து எழுதும்போது நீர் பெற வேண்டிய ஆற்றல்களைத் தெரிந்து எழுதுக. பரந்த விடய ஞானம், திரிபு பட்ட வகையில் எழுதல், தெளிவான சிந்தனை, தாமே மேலதிக கருத்துக்களை எழுதல்.

xi) ஆவணம், ஓம்படை என்ற ஒரு மொழிக்கு தொடர்மொழிகளை எழுதுக.

x) தம்பரைக் காணாத நாளெல்லாம் நாமிங்கு பிறவா நாளே என்று தம்பர் புராணம் பாடியுள்ளார். பொருத்தமான குறியீடுகளை இட்டு மீண்டும் எழுதுக.

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கங்கள் இடுக.**

அ) பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் பண்டைய காலங்களில் மக்களோடு தொடர்பினை ஏற்படுத்த உதவியவை. அச்சியந்திரங்கள் கண்டுபிடிப்பு பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் நோக்கம், பயன்பாடு தற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய விளக்கக்கட்டுரை ஒன்று எழுதுக.

ஆ) ஆரம்ப கால திரைப்படங்கள், அவற்றில் அடங்கும் அம்சங்கள், தற்காலத் திரைப்படங்கள் அவற்றின் வளர்ச்சி இரண்டு வகையாக அதாவது ஆரம்பகால தற்காலத் திரைப்படம் என்ற அமைப்பில் வரலாற்றுக் கட்டுரை ஒன்று எழுதுக.

இ) நம் முன்னோர் தந்த இலக்கியங்கள், அவற்றை வாசிப்பதால் ஏற்படும் விளைவுகள், அவற்றைப் பேணி பாதுகாப்பதன் முக்கியத்துவம். அவற்றின் இன்றைய நிலை பற்றி மேடைப்பேச்சு.

ஈ) படித்து விட்டு வேலையின்றிச் சுற்றித்திரியும் இளைஞன் ஒருவன், வழியில் திடீரென தனது முன்னாள் நண்பனைச் சந்திக்கின்றான். இருவரும் நீண்டநேரம் உரையாடுகின்றனர். சுகதுக்கம் விசாரிக்கின்றனர். இருவருக்கும் இடையே மீண்டும் நெருக்கமான உறவு பிறக்கிறது என்ற கருத்தினை மையப்படுத்தி சிறுகதை எழுதுக.

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 35 - 40 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

மனித வாழ்க்கையைத் துன்பமயமாக்குவது பிணக்கு. நம்பிக்கையும், நல்லெண்ணமும் பயிலாத நெஞ்சில் பிணக்குத் தோன்றுகிறது. மேவிய அன்புடன் வாழும் திறம் இல்லையானாலும் பிணக்குத் தோன்றும். பிணக்கு பகைக்கு வித்திடும். பிணக்கு வாழ்க்கையில் அமைதியைச் சீர்குலைக்கும். போரிடும் உலகம் தோன்றுவதே பிணக்கில் தான். பிணக்கு, வீட்டிலும் தோன்றும், சமூக அளவிலும் தோன்றும். பிணக்குகளைத் தவிர்த்து வாழ்தலே சிறப்பு. நான், எனது என்ற செருக்குகளை அகற்றினால் பிணக்குகள் தோன்றாது. ஆற்று வெள்ளத்திலே சுழி தோன்றும் இச்சுழியில் சிக்கியோர் எவரும் தப்புதல் அரிது. அதுபோல மனிதனும் சாதி, குலம் என்னும் சுழிகளிலே சிக்கிக் கொள்ளுதல் அறியாமை தான். துன்பத்தில் இருந்து விடுதலை பெறுதலுக்கு ஒரே வழி மற்றவர்களின் உரிமைகளை மதித்தல், புறங்கூறல் தவிர்த்தல், மற்றவர்களிடம் அன்பு காட்டல், கேடுகளை அகற்றல், பொய் பேசாது இருத்தல் என்பனவாம். நம்பிக்கையுடன் நல்லெண்ணத்துடன் பழகுவது, உறவுக்கு முதலிடம் கொடுப்பது, யார் மட்டும் அடக்கமாக இருப்பது ஆகிய நற்பண்புகளை மேற்கொண்டு பிணக்குகளைத் தவிர்த்து, பிணக்கு இல்லாத பெருவாழ்வு வாழ்வோம்.

**04) பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

பூத்துக் கிடக்குது காடு - கண்டு
பூரித்துப் பரவச மானேன்
காத்துக் கிடந்ததுக் கேற்ப - இந்தக்
காடு செழித்து வளர்ந்தது பாரு.

நேற்றும் அதற்குள்ளே போனேன் - என்
நெஞ்சை இழந்து வெறி கொள்ள லானேன்
கவிவந்து என்முன்னே வீசும்.

நெஞ்சில் சுமையுடை யோரும் - வாழ்வில்
நிம்மதி யளின்றி அலைக்கழிவோரும்
கொஞ்சம் இதற்குள்ளே வாரும் - ஞானம்
குடிகொண்டால் யாவும் தானாக ஓடும்.

i) ஏன் பரவசமானதாகக் கூறப்படுகிறது?

ii) கொஞ்சம் இதற்குள்ளே வாரும் எனக் குறிப்பிடப்படுவது எதனை?

iii) உள்ளே வந்தால் யாது ஏற்படும் என கவிஞர் கூறுகிறார்?

iv) நெஞ்சு வெறி கொள்ளக் காரணம் யாது?

v) பரவசம், செழித்து என்பதன் பொருளினை எழுதுக.

**05) உமது வகுப்பு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட நூலின் வெளியீட்டு விழாவிற்கு பொதுமக்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவித்து 75 சொற்களில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.**

அல்லது

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தில் முதியோருக்கான கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்குக் குறித்த தினத்தில், குறித்த இடத்தில் அனைவரையும் ஒன்று கூடும்படி 75 சொற்களில் சுவரொட்டி எழுதுக.

## பகுதி III

01) சுருக்கமான விடை எழுதுக

1) "ஊருணி நீர் நிறைந்த தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு" இக்குறளின் பொருளினை எழுதுக.

2) பசி வந்தால் பறந்து போகும் பத்தும் எவை?

3) "மடல் பெரிது தாழை மகிழினது கந்தம" கொண்டு கூட்டி எழுதுக.

4) வாக்குண்டாம், பழமொழி நானூறு என்ற நூல்களை எழுதியோர் யாவர்?

5) முத்தமிழ் எது? முடியுடை மூவேந்தர் யாவர்?

6) கலம்பகம் என்றால் என்ன?

7) "அப்படி அடிக்க முடியுமாடா அம்பி" யாரால் யாருக்கு கூறப்பட்டது.

8) "பார்வைகள்" சிறுகதையில் வரும் பரஞ்சோதி டாக்டரின் குண இயல்புகள் இரண்டு தருக.

9) பி. எஸ்.ராமையா எழுதிய சிறுகதைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

10) ஏர் எழுபது என்ற நூலை எழுதியவர் யார்? ஏர் எழுபது என்றால் என்ன?

02) பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றினதும் கோடிட்ட தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

அ)
பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்
கரந்து மறைக்காலும் ஆமோ? நிரந்தெழுந்து
**வேயில் திரண்டதோள் வேல்கண்ணாய் ! விண் இயங்கும்**
**ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்**

ஆ)
**நல்வாய் வரும்பிள்ளை நல்லுரையொன் நாற்றிருந்தும்**
**அல்லதுநூ றோதிடினு மாகாதே** - நல்வளர்ச்சி
மாட்டின் பிணிக்கு மருந்தா யொருகூடு
நாட்டில் வழங்கும் பொதுமொழி

இ)
"செய்வன திருந்தச் செய்" என்பது போல் நாம் மேன்மை பெறுவதற்கு ஒரே வழியுண்டு. அவ்வழியாவது நம்முடைய வேலையை நாம் லோபம் இன்றித் திருந்தச் செய்வதாம். **ஒரு வேலையினுடைய தாழ்மையை எண்ணி, அவ்வேலை செய்பவரை ஒருபோதும் தாழ்வாகக் கொள்ளலாகாது.** தாழ்ந்த வேலை செய்பவரை விட உயர்ந்த வேலை செய்பவரை மதிப்பதும் தவறு.

ஈ)
சிலநாளில் தோன்றிச் சிலநாளிலிருந்து சிலநாளில் மறைந்து போவதாகிய இம் மக்களுடம்பிற் பிறந்தவர்களான நாம் எந்த வகையான செல்வத்தைப் பெறுவதற்கு முயலல் வேண்டுமென்றால், என்றும் அழியாததாய் நம் உடம்பு அழிந்தாலும் தான் அழியாமல் நமது உயிரோடு சேர்ந்து நம்மை எல்லாப் **பிறப்புகளிலும் தொடர்ந்து வரும் கல்வியிலே கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.**

03) நம்மில் ஒவ்வொருவருக்கும் அழியாப் பெருஞ் செல்வத்தைத் தேட வேண்டும் என்னும் அவா இயற்கையாகவே வேரூன்றி இருக்கிறது என்பதை கல்வியே அழியாச் செல்வம் என்ற கட்டுரையைக் கொண்டு விளக்குக.

அல்லது

ஒருவன் தன்னுடைய வேலையைத் திருந்தச் செய்ய வேண்டும் என்ற கருத்தினை "பதிவிரதை சரித்திரம்" எவ்வாறு நியாயப்படுத்துகிறது?

04)
"பார்வைகள்" சிறுகதை தனிமனிதனது பிரச்சினைகளை சித்திரிக்கிறது. ஆராய்க.

அல்லது

பாரதியாரின் கவிநயம் என்ற பகுதியில் பாரதியார் பற்றிக் கட்டுரையாசிரியரின் கருத்துக்களை தொகுத்துக் கூறுக.

5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

05) கவிச்சக்கரவர்த்தி என்ற நாடகத்தில் இராமாயணம் இயற்ற வேண்டிய தேவை, நாடகத்தில் தமிழின் பெருமை கூறப்படும் விதம் பற்றி எழுதுக.

06) "நட்சத்திரக் குழந்தை" என்ற சிறுகதையின் வர்ணனைச் சிறப்புக்களை விளக்குக.

07) "நந்திக்கலம்பகம்" என்ற பகுதியில் செவிலியின் இரங்கல் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

# புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பொதுஅறிவு

## நிறுவனங்களும் இலட்சினைகளும்

நிறுவனங்கள் பலவித நோக்கங்களைக் கொண்டு இயங்குகின்றன. அவை தமது செயற்பாட்டை வெளிப்படுத்தும் விதமான இலட்சினைகளைக் கொண்டுள்ளன.

### அரச நிறுவனங்கள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை மின்சார சபை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

சமுர்த்தி அதிகார சபை

மத்திய சுற்றாடல் அதிகார சபை

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

இலங்கைத் துறைமுக அதிகார சபை

இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகர அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சுற்றுலாச் சபை

நாடாளுமன்ற செங்கோல்

ஊழியர் நம்பிக்கை நிதிய சபை

### வங்கிகள்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

தேசிய சேமிப்பு வங்கி

ஹற்றன் நஷனல் வங்கி

கொமர்சல் வங்கி

சம்பத் வங்கி

### ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் சபை

உணவு விவசாய நிறுவனம்


சர்வதேச தொழிலாளர் நிறுவனம்

உலக சுகாதார நிறுவனம்

யுனிசெப்

(தொடரும்....)

# சீன விடயத்தில் நழுவும் போக்கு; ஆளும் கூட்டணிமீது குற்றச்சாட்டு



(புதுடில்லி)

1962ஆம் ஆண்டு இந்திய சீனாவிற்குமிடையே எல்லைப்பிரச்சினை தொடர்பாக போர் நடந்தது. இதன் 50ஆம் ஆண்டு நினைவு தினம் கொண்டாடப்பட்டது. இந்நிலையில், பாரதீய ஜனதாவின் தலைவர் ராஜ்நாத் சிங் இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்:-

1962ஆம் ஆண்டு இந்தியா சீனாவிற்கு இடையே நடந்த போரில் இந்தியா தோல்வி அடைந்தது. 1962ஆம் ஆண்டு சீனா நம்மை ஆக்கிரமித்தபோது, நேரு கடைபிடித்த அதே நழுவும் மற்றும் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் பழைய கொள்கைகளையே இன்று ஆளும் ஐக்கியமுற்போக்கு கூட்டணிக் கட்சி கடைபிடித்து வருகிறது.

அந்த தோல்விக்கான காரணம் குறித்த ஹெண்டர்ஜன் புரூக்கின் அறிக்கையை எல்லோரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் வெளியிடப்படவேண்டும். மேலும் அந்த அறிக்கை, முன்னாள் இராணுவ வீரர்களுக்கு ஒரு பதவிக்கு ஒரு ஓய்வூதியம் கொடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்துகிறது. இந்தோ - சீனப் போரில் வீரமரணம் அடைந்த நம் வீரர்கள் ஞாபகமாக போர் நினைவு மண்டபம் கட்டவேண்டும்.

ஆளும் ஐக்கியமுற்போக்கு கூட்டணி ஆட்சிக்கு வந்ததிலிருந்து, அருணாச்சலப்பிரதேச மாநிலம் முழுவதும் மற்றும் காஷ்மீரின் லடாக்கின் ஒரு பகுதியின் மீது சீனா உரிமைப் பிரச்சினையை எழுப்பி வருகிறது. ஊடகங்களில் வரும் செய்திகளின் அடிப்படையில், சீனா இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் ஊடுருவி வருவதாகவும் தெரிகிறது. மேலும் ஒரு வரலாற்றுத் தவறு நடக்க இது வழிவகுத்துவிடும்.

இந்திய எல்லைப்பகுதியில் சீனாவின் அத்துமீறல்களையும் மற்றும் அதிகாரப்பூர்வமாக உரிமை கோருவதையும் எதிர்த்து ஆளும் ஐக்கியமுற்போக்கு கூட்டணி, இந்தியா இறையாண்மைக்குரிய இப்பிரச்சனையை வலியுறுத்தி கூற முடியாத நிலையில் உள்ளது என்பதையே இது காட்டுகிறது என அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# புதுடில்லியை தாக்கும் டெங்கு

(புதுடில்லி)

இந்தியாவில் டில்லி, தமிழ்நாடு உள்பட சில மாநிலங்களில் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது. டெல்லியில் இந்த பருவகாலத்தில் இதுவரை 618 பேருக்கு டெங்கு காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளது. டில்லி மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் இந்த டெங்கு காய்ச்சல் நோய் பாதிப்பு உள்ளது என்று மாநகராட்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டும் 32 பேர் டெங்கு நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை இந்த நோய் காரணமாக ஒரு வயது பெண் குழந்தை உள்பட 2 பேர் இறந்துள்ளனர். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் அதிகமாக இருக்கக்கூடும்.

கடந்த ஆண்டு டில்லியில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 216 தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸில் இணைகிறார் நடிகை நமீதா



தென்னிந்திய திரைப்பட நடிகை நமீதா காங்கிரஸில் இணையப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா முழுவதும் பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரஸ் செய்த ஊழல்கள் அம்பலமாகி வருகின்றன.

இந்நிலையில் ஆட்சியை தக்க வைக்க காங்கிரஸ் பல்வேறு வியூகங்களை கையாள முயற்சி செய்து வருகின்றது.


சினிமா நடிகைகளை வைத்து கட்சிக்கு பலம் சேர்க்கும் ஒரு நடவடிக்கையாக இதை காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில் தென்னிந்திய திரைப்பட நடிகை நமீதா காங்கிரஸில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

எந்த கட்சியில் சேர்வீர்கள் என்ற கேள்விக்கு பதிலளித்த நமீதா, கதராடை அணிவதுதான் தனக்கு பிடிக்குமென சூசகமாக கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவர்கள் அணியும் பிரதான ஆடை கதர் என்பது குறிப்பிடத்தக்கது.




# நித்தியானந்தா திடீர் தலைமறைவு



(திருவண்ணாமலை)

திருவண்ணாமலையிலிருந்து, நித்தியானந்தா திடீர் தலை மறைவானதையடுத்து, கிரிவலப் பாதையில் உள்ள அவரது தியான பீடம் வெறிச்சோடியுள்ளது.

திருவண்ணாமலை - கிரிவலப்பாதையில் உள்ள தியான பீடத்தில், 20 நாட்களுக்கும் மேலாக நித்யானந்தா தங்கி, தியான பயிற்சி அளித்து வந்தார். மேலும், இங்கு நவராத்திரிப் பண்டிகையும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தினமும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. மதுரை இளைய ஆதீனம் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து, அவரது நெருங்கிய முக்கிய பிரமுகர் மற்றும் சீடர்களிடம், 19ஆம் திகதி இரவு முழுவதும், நித்யானந்தா ஆலோசனை நடத்தினார்.

நவராத்திரி விழா முடியும் வரை இங்கேயே தங்கி, பக்தர்களுக்கு அருளாசி வழங்கப்படும் என்று, கூறினார். தியான பயிற்சி முகாம், 28ஆம் திகதி வரை நடைபெற இருந்த நிலையில், இரவோடு இரவாக, திடீரென நித்யானந்தா தலைமறைவாகி விட்டார்.

## 39 கிலோ மீற்றர்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் முத்தாய்ப்பாகவே இப்போது 39 கிலோ மீற்றர் உயரத்திலிருந்து குதித்துள்ளார்.

ஒருவர் ஒரு சாதனை படைத்தால் அதை மிஞ்ச மற்றவர்கள் முனைவது உண்டு. ஆனால் பெலிக்ஸின் சாதனையை மற்றவர் பின்பற்றுவது எளிதல்ல. ஹீலியம் நிரப்பப்பட்ட பலூனுக்கு ஆன செலவே இரண்டரை இலட்சம் டொலர். அவர் அணிந்திருந்த விசேஷ உடைக்கு ஆன செலவும் மிக அதிகம். மொத்தத்தில் பல கோடி டொலர் செலவாகியிருக்கும்.

பெலிக்ஸ் பத்திரமாக உயரே சென்று விட்டுத் திரும்புவதற்கு அவருக்கு பக்கபலமாக 100 பேர் அடங்கிய குழு செயற்பட்டது. அதில் எஞ்சினியர்கள், மருத்துவ நிபுணர்கள் முதலானோர் அடங்குவர்.

இது பெலிக்ஸின் தனிப்பட்ட முயற்சி அல்ல. இது உலகின் பல நாடுகளிலும் Red Bull எனப்படும் எனர்ஜி பானத்தை விற்கும் பிரபல ஆஸ்திரிய நிறுவனம் தனது பானத்துக்கு விளம்பரம் செய்வதற்காகக் கையாண்ட ஏற்பாடே.

ஆனாலும் நாஸா விஞ்ஞானிகள் இதில் அக்கறை காட்டினர். உடலியல் தொடர்பான ஆராய்ச்சி நிபுணர்கள் பெலிக்ஸ் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களில் தீவிர அக்கறை கொண்டுள்ளனர்.

பெலிக்ஸின் அனுபவம் எதிர்காலத்தில் தகுந்த விண்வெளி உடையை உருவாக்கவும் அவசர நிலைமைகளில் விண்வெளி வீரர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கும் மேலும் சிறப்பான பலூன்களை உருவாக்கவும் உதவும் என்று கருதப்படுகிறது. அந்த வகையில் இது முற்றிலும் விளம்பர ஸ்டண்ட் அல்ல.

காற்று மண்டல நிலைமைகளும் பெலிக்ஸ் போன்றோரின் அனுபவமும் காட்டுவது இது தான். அடிப்படையில் மனிதன் ஒரு நில வாழ் உயிரினம்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : இ. கிஸோவர்மா

முகவரி: இல: 901 சுண்டுக்குளி

அகவை 7 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# லிபியாவில் மீண்டும் சண்டை; 22 பேர் உயிரிழப்பு



(திரிபோலி)

லிபியாவில் கடாபி ஆதரா வாளர்களுடன் நடந்த சண்டையில் 22 பேர் பலியாகியுள்ளனர்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த கடாபி சமீபத்தில் ஏற்பட்ட புரட்சி காரணமாக கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து அங்கு புதிய அரசு ஆட்சி செலுத்தி வருகிறது. இந்நிலையில், கடாபிக்கு ஆதரவு தெரிவித்து வந்த பானி வாலித் என்னும் பதியிலுள்ள கடாபி ஆதரவாளர்களுக்கும் அந்த பகுதியில் அரசுக்கு ஆதரவளித்துவரும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது.

இந்த தாக்குதல்களில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இருதரப்பையும் சேர்ந்த 200இற்கும் மேற்பட்டோர்கள் படுகாயமடைந்துள்ளனர். ஆயுதக்கலாசாரம் தாண்டவமாடும் லிபியாவில் புதிதாகப் பொறுப் பேற்றுள்ள அரசு தன்னை நிலைநிறுத்திக்கொள்ள மிகவும் போராடி வருகிறது.

இந்நிலையில் கடாபியாவின் செய்தித் தொடர்பாளர் மௌசா இப்ராகிமை கைது செய்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த கடாபி ஒழிந்தாலும் இன்னும் அங்கு முழுமையான அமைதி திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# போஸ்னியாவில் இரும்பு பாலம் திருட்டு




போஸ்னியா நாட்டில் இரும்பு பாலத்தை திருடி சென்றவனை பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஐரோப்பிய நாடான போஸ்னியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ளது பிராக்கோ. விளைநிலங்கள் சூழ்ந்த இப்பகுதியில் ஆற்றைக் கடக்க இரும்பு பாலம் ஒன்று இருந்தது.

80ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட இந்தப் பாலம் கடந்த வாரம் காணாமல் போனது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் பொலிஸிடம் புகார் தெரிவித்தனர்.வழக்கமாக கழிவுநீர் கால்வாயின் இரும்பு மூடிகளை திருடும் நபர் ஒருவர் மீது பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

29 வயதுடைய அந்த திருடனின் வீட்டுக்கு வெளியே திருடப்பட்ட பாலம் இரண்டாக உடைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து அந்த திருடனை பொலிஸார் கைது செய்தனர். கழிவு நீர் கால்வாய் மூடிகளை திருடி வந்த திருடன் பெரிய தொகையை சம்பாதிக்கும் நோக்கில், இரும்பு பாலத்தையே பெயர்த்து எடுத்துச் சென்றதைக் கண்டு அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது பாகிஸ்தானில் தாக்குதல்

பாகிஸ்தானில் சிறுபான்மை இனத்தவர்களான கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு கராச்சி அருகேயுள்ள ஈசா நக்ரி என்ற இடத்தில் மின்வெட்டைக் கண்டித்து போராட்டம் நடந்தது.

அப்போது பழைய காஜி கேம்ப் பகுதியில் உள்ள செயின்ட் பிரான்சிஸ் தேவாலயத்தின் மீது கும்பலொன்று தாக்கியது. இதனையடுத்து அக்கும்பல் மீது பொலிஸார் அவமதிப்பு வழக்கைப் பதிவு செய்தனர்.

இதனால் கோபமடைந்த அந்த நபர்கள், ஈசா நக்ரியில் உள்ள மற்றொரு கிறிஸ்துவ தேவாலயத்தை அடித்து நொறுகியுள்ளனர்.

மேலும் இவர்கள் தேவாலயத்திற்குள் புகுந்து கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிள்களை தரையில் வீசி எறிந்தனர். இத்துடன் அங்கிருந்த 40 ஆயிரம் ரூபா நன்கொடை பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இதுவரை இப்பகுதியில் 6 கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல்களும், கொள்ளை சம்பவங்களும் நடந்துள்ளன. இவற்றில் சில தேவாலயங்கள் தீ வைத்தும் எரிக்கப்பட்டுள்ளன.



எனவே தங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என பாகிஸ்தான் அரசிடம் கிறிஸ்தவ அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

# ஈரானில் 3 பேருக்கு தூக்குத் தண்டனை




ஈரானில் குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புடைய மூன்று குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் தென்கிழக்கே பலுசிஸ்தான் மாகாணத்தில் கடந்த 2010ஆம் ஆண்டு ஜூலை மற்றும் டிசெம்பர் மாதங்களில் சம்பாஹர் பகுதியில் குண்டு வெடித்தது. இதில் 67 பேர் பலியாகியுள்ளனர். இது தொடர்பாக யாக்ஹா, அப்துல் ஜலில், அப்துல்பாசித் ரகி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்கில் ஜஹிர்தான் நீதிமன்ற நீதிபதி முகமது மெர்தாஹி தூக்கு தண்டனை விதித்தார்.இதனையடுத்து மூன்று பேருக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

# பிரிட்டன் முன்னாள் பிரதமரின் கார் ஏலம்



பிரிட்டன் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் பயன்படுத்திய லாண்ட் ரோவர் கார் 1.1 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனையானது. சர்ச்சிலின் 80 ஆவது பிறந்தநாளின் போது பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இக்கார் அவருக்கு பரிசளிக்கப்பட்டது. கேம்பிரிட்ஜ்ஷயரில் இக்கார் ஏலம் விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கார் 50 இலட்சம் ரூபாவில் ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்ததை விட இரு மடங்கு அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டது.

இங்கு ஏலம் விடப்பட்ட 2 ஆயிரத்துக்கும் அதிகமான பழங்கால வாகனங்களில் சர்ச்சில் பயன்படுத்திய கார் தான் அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

# பர்மா இராணுவ ஆட்சியில் மாற்றம் ஜனாதிபதி தொலைக்காட்சியில் பிரவேசம்

பர்மாவில் (மியான்மர்) இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு ஜனநாயகம் மலர வேண்டி ஆங் சான் சுகி போராடி வருகிறார். இந்நிலையில் கடந்த வருடம் ஆட்சி பொறுப்பிற்கு வந்த ஜனாதிபதி தெய்ன் செய்ன், தொலைக்காட்சியில் தோன்றி செய்தியாளர்களின் சந்திப்பில் கலந்து கொண்டார். இது அந் நாட்டு இராணுவ ஆட்சி முறையில் மாற்றம் கண்டுள்ளதையே காட்டுகிறது.

அந்தப் பேட்டியின் போது அவர் கூறியதாவது:-

வடக்கில் நிலவும் அமைதியின்மைக்கு எதிராகப் போராடிவரும் ஆங் சான் சுகிக்கு



ஒத்துழைப்பு தெரிவிக்கிறேன். ஊடகத்தின் முன்பு எனக் கிருந்த பயத்தை மறைக்க நான் கஷ்டப்பட்டேன் என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். முன்பு பி.பி.சி. நிறுவனத்திற்குப் பேட்டி அளித்தபோது பதிலளிக்க மிகவும் சிரமப்பட்டேன். எதிர்கட்சித் தலைவர் ஆங் சான் சுகி விரும்பினால் ஆட்சியில் பங்கேற்கலாம். கட்சின் மாநில தீவிரவாதிகளுடன் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயார் என்றார்.

வரும் 2015இல் அங்கு தேர்தல் நடக்கவுள்ளது. அரசியல் ரீதியாக மாற்றத்தை எதிர்பார்க்கும் பர்மாவில் நடைபெற்று வரும் இராணுவ ஆட்சிக்கு அந்த தேர்தல் ஒரு சோதனையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.



அமெரிக்காவின் கென்னடி விமான நிலையத்திற்கு வந்த அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா, அங்கு குழுமியிருந்த குழந்தைகளிடம் கைகுலுக்கி மகிழ்ந்தார்.

# கினியா அகதிகளுக்கு கனடாவில் குடியுரிமை



கனடாவிற்கு அகதிகளாக வந்த தாயும், அவளது ஐந்து குழந்தைகளும் நிரந்தரமாகத் தங்க மனித நேய அடிப்படையில் குடியுரிமை வழங்கப்பட்டது.

கினியா நாட்டை சேர்ந்த காங்கோ கேய்ட்டார் என்பவர் தனது ஐந்து குழந்தைகளுடன் கடந்த 2007ஆம் ஆண்டில் கனடாவிற்கு அகதியாக வந்தார்;

இவரை கினியாவிற்கே திருப்பி அனுப்ப கனடாவின் குடியுரிமை மற்றும் புலம்பெயர்ந்தோர் துறை நான்கு முறை முயன்றது.

ஆனால் காங்கோவுக்கு உடல் நலம் குன்றியதாலும், இவரது குழந்தைகளுக்கு சரியான கடவுச்சீட்டு இல்லாததாலும் வெளியேற முடியவில்லை.

இந்நிலையில் தற்போது ஐந்தாவது முறையாக விண்ணப்பித்த இவர்களுக்கு, மனித நேய அடிப்படையில் கனடாவில் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவில் 'திவிநெகும' கோலாகல ஆரம்பம்



நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவிலுள்ள மக்களின் போசாக்கு, வருமானம் மற்றும் வாழ்கை தரத்தினை மேம்படுத்தி சௌபாக்கியமான இல்லம், சுபீட்சமான தயாகத்தைக் கட்டி எழுப்பும் வேலைத்திட்டத்திற்கமைவாக நெடுந்தீவு பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள தோட்டத்தினுள் விதை பொருள் நடும் வேலைத்திட்டம் நேற்று மதியம் பன்னிரண்டு மணியளவில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறியின் தலைமையில் ஆரம்பமாகியது. இவ்நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச சபைத்தவிசாளர் தானியேல் றெக்சியன், பிரதேச சபை உறுப்பினர்கள் சின்னப்பு எட்வேட்ராசா, லதிஸ் லாஸ் லோறன்ஸ் மற்றும் நெடுந் தீவுப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் தி.மகேஸ் வரகுமார் மற்றும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய பிரதேச செயலர் விதைபொருள் நடும்நிகழ்வு இன்று இங்கு சம்பிர்தாய பூர்வமாக ஆரம்பிக்கப்படுவதாகவும் இந்நிகழ்வானது கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் எதிர்வரும் நாட்களில் நடைபெறும் எனவும் இதன் மூலம் வளமான ஒரு சந்ததியினர்ரை உருவாக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார் இதனுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மிக நெருக்கமான கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டும் எனவும் கேடடுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதேச சபைத்தவிசாளர் நெடுந்தீவுப் பிரதேசமானது வளமான செழிப்பான ஒரு பிரதேசமாக பல காலங்களுக்கு முன்னர் இருந்ததாகவும் அந்நிலைமை தற்போது இல்லை எனவும் இப்படியான திட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் செழிப்பான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து விதை பொருட்களையும் மரக்கன்றுகளையும் நட்டுவைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

# உக்கிரமடைகின்றது டெங்கு

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகி பத்துப்பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திருநெல்வேலிப் பகுதியில் ஐந்து பேரும், யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவரும் மற்றும் சண்டிலிப்பாய், சங்கானை, சாவகச்சேரியில் தலா ஒவ்வொருவரும் இவவாறு டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிச் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த மாதம் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் இந்த வருடத்தில் டெங்கு நோய்க்குப் பலியானவர்களின் எண்ணிக்கை இரண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## உற்சாகத்துடன்...

உள்ளனர். அரச சட்டத்திற்கு அமைவாக மீள் குடியமர்ந்துள்ள மக் களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பதாகவும், மின்சாரம், போக்குவரத்து உட்பட அனைத்து வசதிகளும் விரைவில் செய்து கொடுக்கப்படும் என்றும் யாழ். அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

வீடுகள் அமைப்பதற்கான கூரைத் தகடுகள் உடனடியாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எமது சொந்த இடங்களுக்கு இருபது வருடங்களின் பின்னர் மீள்குடியமர்ந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைந்துள்ளோம். எமது சொந்த மண்ணில் வாழ வழி அமைத்துக் கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக மீள்குடியமர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மாதகல் மேற்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து கடற்படையினர், பிரதேச செயலர், கிராம சேவகர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி இப்பகுதி மக்களின் மீள் குடியேற்றத்தினை விரைவில் மேற்கொள்வதாக உறுதி அளித்ததன் பயனாக நேற்று மக்கள் மீள் குடியேற்றப்பட்டனர்.

பிரதேச செயலர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவையாளர் மற்றும் வலி. தென்மேற்குப் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஆகியோரின் ஒத்துழைப்புடன் இவ் மீள்குடியேற்றம் நடைபெறுகின்றது.

இவ்வாறு மீள்குடியமர்ந்துள்ள மாதகல் மேற்கு, மாதகல் கிழக்கு, குருமன்துறைப் பகுதி மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என்று ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கடந்த வாரம் இடம்பெற்ற மாதகல் பகுதி மக்களுக்கான கலந்துரையாடலின்போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

திட்டத்தை காத்திரமான முறையில் முன்வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச் சமூகம் வலியுறுத்த வேண்டுமென அகாஷி குறிப்பிட்டுள்ளார் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தனிமைப்படுத்தாது சகல வழிகளிலும் இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக தீர்வுத் திட்டமொன்று துரித கதியில் முன்வைக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது அக்காஷி இதனைத் தெரிவித்துள்ளார். வன்னிப் பிரதேசத்திற்குள் மனிதாபிமான தொண்டர்கள் சுதந்திரமாக பிரவேசிப்பது தொடர்பில் இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்துடன் பேச வேண்டுமென அகாஷி வலியுறுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## படைமுகாம்...

தெரிவிக்கையில், யாழில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தலைவர்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. போர் முடிந்து 3 ஆண்டுகள் சென்ற நிலையிலும் தமிழ் மக்கள் இன்னமும் இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுபடவில்லை. தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்தினர் சுவீகரிக்க, அதில் இராணுவ முகாம்களை அமைப்பதற்கு சீன அரசு உதவி வருகின்றது. இவை தொடர்பாக ஐ.நா.வில் முறையிடவுள்ளோம். இந்த நாட்டின் ஜனாதிபதியிடம் எமது மக்களின் நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளமை தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளோம். ஆனால அதனால் எந்த பலனும் கிடைக்கவில்லை. இராணுவம் வடபகுதியில் நிரந்தரமாக இருப்பதற்கு முயற்சிக்கின்றது. எமது மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. அவர்களது காணிகளில் இராணுவம் இருக்கின்றது. யாழில் இராணுவ பிரசன்னம் முழுமையாக குறைக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

## மாகாண...

தீவிரவாதக் கட்சிகள் தொடர்ந்து பேசி வருவது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முதற்கட்டமாக 13 ஆவது திருத்தமும் அதையோட்டிய மாகாண சபைகளும் ஒழிக்கப்படும். இரண்டாம் கட்டமாக நாட்டின் மாகாணங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு ஒன்பது மாகாணங்கள் ஐந்து மாகாணங்களாக குறைக்கப்படும்.

இதன் மூலம், எந்த ஒரு மாகாணத்திலும் தமிழ் மற்றும் முஸ்லிம மக்கள் பெரும்பான்மையாக இருக்கமாட்டார்கள். மூன்றாவது கட்டமாக அனைத்து நிர்வாக மற்றும் தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிறுபான்மையாக மாற்றப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு எந்த ஒரு மாவட்டத்திலும் தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருக்க முடியாத நிலைமை உருவாக்கப்படும்.

இன்று வட மாகாணத்தில் தமிழர்களும் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இந்த மாகாணங்களுக்கு உள்வரும் மாவட்டங்களிலும் தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படும்.

அனைத்து மாகாணங்களுக்கும் க்டல் எல்லை அவசியம் என்ற காரணத்தை காட்டி மாகாண எல்லைகளை மீளமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன்மூலம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் மாகாண மற்றும் மாவட்டங்களின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டு அனைத்து மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் சனத்தொகை குடிபரம்பல் மாற்றி அமைக்கப்படும். இதுதான் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வாகும். இந்த இலக்கை நோக்கியே அரசாங்கம் பயணம் செய்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## திவிநெகும...

களிடம் சென்று விதைப் பொதி ளைப் பெற்று வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

## இரு பிரதேச...

மற்றும் உரிய ஆவணங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிதியை ஒப்பந்தகாரருக்கு விடுவிக்காது இழுத்தடித்து பிர்ச்சினையை உரிய அதிகாரிகள் தோற்றுவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மக்களின்...

ராஜபக்ஷ தெரிவித்தார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

திவிநெகும சட்டமூலத்துக்கு இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே முக்கிய தடையாக இருக்கின்றனர். தமது அரச விரோத நடவடிக்கைகளை முன்னெடுக்க வடபகுதி பொதுமக்களையே இவர்கள் இலக்கு வைத்துள்ளனர். சமுர்த்தி மற்றும் திவிநெகும திட்டங்கள் மூலம் வடபகுதி வறிய மக்கள் அடையப்போகும் நன்மைகளை இவர்கள் தடுக்கின்றனர்.

2001 முதல் 2004 ஆண்டு காலப் பகுதியில் இவர்கள் புலிகளின் பிரதிநிதிகளாகவே நாடாளுமன்றம் நுழைந்தனர். எனவே பொது மக்களுக்கு புலிகள் நன்மை செய்தாலும் தீமைகள் செய்தாலும் அவற்றின் முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே ஏற்கவேண்டும். வடபகுதி மகக‌ளுக்கு அரசாங்கம் வழங்கிய அடிப்படை வசதிகளை புலிகள் அழித்தனர். மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் செல்லும் ரயில் பாதைகளை இவர்கள் நிர்மூலமாக்கினர். தொழிற்சாலைகளை தகர்த்தனர். இறுதியாக மக்களின் உயிர்களையும் பறித்தனர்.

திவிநெகும திட்டம் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனினும் இந்த வருடம் வரையில் வடக்கில் அது முழுமையாகச் செயற்படவில்லை. கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் சமுர்த்தித் திட்டம் செயற்படவில்லை. அன்று புலிகள் என்ன செய்தார்களோ அதனையே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்கின்றனர்.

வடபகுதி மக்களின் முக்கிய பிரச்சினை தீர்க்க அரசாங்கம் பிம் சவிய திட்டத்தை முன்வைத்தது. எனினும் அத்திட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால் அத்திட்டம் முடக்கப்பட்டது. நாடு சுதந்திரமடைந்து சுமார் 60 வருடங்களில் கிடைக்காத அடிப்படை வசதிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வடபகுதி மக்களுக்கு வழங்கியது. புலிகள் இல்லாதொழித்த வசதிகளையும் அதற்கு மேலான வசதிகளையும் இன்றைய அரசு செய்துள்ளது. ஆனால் அடிக்கடி வெளிநாடு செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு பொய்களைக கூறி அரசின் நல்ல திட்டங்களைத் தாமதப்படுத்துகின்றனர்.

வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் கடன் உதவிகள் மற்றும் உதவிகளைத் தடுக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைக்கின்றனர். இலங்கைக்கு உதவி வழங்குங்கள் என்று அவர்கள் ஒருபோதும் வெளிநாடுகளிடம் இதுவரை கோரிக்கை விடவில்லை. வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவே நாம் திவிநெகும திட்டத்தை முன்னெடுக்கிறோம். மாகாணசபை அதிகாரங்களில் நடவடிக்கைகளில் நாம் தலையிடமாட்டோம். தமிழ் மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட நிர்வாக முறையொன்றை அவர்களுக்கு நாம் வழங்குவோம் என்றும் அமைச்சர் கூறினார்.

# 13 ஆவது திருத்தத்தை அகற்ற இந்தியா ஆதரவு வழங்காது

## இந்திய பேராசிரியர் கூறுகிறார்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றிய 13 ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் இலங்கையில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசு 13 ஆவது சட்டத் திருத்தத்தை இரத்து செய்யுமானால் அது அரசியல் ரீதியாக பிழையான ஒரு நடவடிக்கையாக இருக்கும் என இலங்கை-இந்திய உறவுகள் குறித்து கவனம் செலுத்திவரும் தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் சஹாதேவன் கூறுகிறார்.

இறையாண்மை பெற்ற ஒரு நாடு என்ற வகையில் எந்த ஒரு சட்டத்தையும் நிறைவேற்றும் உரிமை இலங்கைக்கு உண்டு, எனவே இந்தச் சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தின் மூலமாக அது இரத்து செய்யமுடியும் என்பது சட்டப்படி சாத்தியமே என்றாலும் அது அரசியல் ரீதியில் தவறான ஒரு நடவடிக்கையாக இருக்கும் என அவர் கூறினார்.

ஏனென்றால், இந்தச் சட்டத் திருத்தம் இலங்கையின் மற்ற சட்டதிருத்தங்களைப் போன்றதல்ல. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண கொண்டுவரப்பட்ட ஒரு நடவடிக்கை. இலங்கையில் போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும், தமிழ்ச் சிறுபான்மையினருக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றை தர அரசு முன்வரவில்லை என்ற கருத்து சர்வதேசத்தில் மேலோங்கியிருக்கும் நிலையில், இவ்வாறான நடவடிக்கை, இலங்கை மீதான நம்பகத்தன்மையை பாதிக்கும் என்றார் சஹாதேவன்.

இந்தியா இந்த நடவடிக்கையைத் தடுக்குமோ இல்லையோ, ஆனால் நிச்சயம் வரவேற்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கொழும்பு வந்தார் இந்தோனேஷிய உப ஜனாதிபதி



டுபாயில் நேற்று ஆரம்பமாகிய உலக சக்தி மாநாட்டில் பங்கேற்பதற்காக பயணமான இந்தோனேஷியாவின் உப ஜனாதிபதி பேராசிரியர் பொடினோ நேற்று முன்தினம் இரவு இலங்கைக்கு வருகை தந்தார். அவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா வரவேற்றதுடன், இருநாட்டு உறவுகளை மேம்படுத்திக்கொள்வது தொடர்பில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

## கடமை தவறிய பொலிஸாருக்கு தண்டனை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்ற நிகழ்வில் பாதுகாப்பு வழங்குவதற்காக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் இருவர் தங்களின் கடமையை அலட்சியம் செய்தமைக்காக அவ்விருவரும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு - 07 இலுள்ள 120 வருடங்கள் பழமை வாய்ந்த குதிரைப் பந்தயத்திடல்பார்வையாளர் கூடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறக்கப்பட்ட தினத்தன்று பாதுகாப்பு கடமையில் சரியாக ஈடுபடாத இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையே கறுவாத் தோட்ட பொலிஸார் நேற்று திங்கட்கிழமை இடைநிறுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது மோட்டார் சைக்கிள் ஒன்று மேடைக்கு அருகில் சென்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

## வீதி விபத்தில் இளம்பெண் பலி

அநுராதபுரம்-கம்பிரிகஸ்வெவ வீதியின் ரலபனாவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் பெண் ஒருவர் பலியானதோடு மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

28 வயதான பெண் பலியானதோடு, தகப்பன் மற்றும் மகன் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விமானத்தில் கோளாறு மயிரிழையில் தப்பினர் பயணிகள்

சென்னை விமான நிலையத்தில் இருந்து இலங்கை பயணிக்க இருந்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதை விமானி உரிய நேரத்தில் கண்டுபிடித்ததால் 150 பயணிகள் உயிர் தப்பினர்.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு நேற்று முன்தினம் மாலை 3.40 மணிக்கு விமானம் புறப்பட்டு செல்ல இருந்தது.

இதில் மொத்தம் 150 பேர் பயணம் செய்ய இருந்தனர். பயணிகள் அனைவரும் அனைத்து சோதனைகளையும் முடித்துக்கொண்டு விமானத்தில் ஏறி அமர்ந்தனர்.

விமானம் புறப்பட தயாரான போது, விமானி கடைசியாக விமானத்தை பரிசோதனை செய்தார். அப்போது விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு இருப்பதை கண்டுபிடித்தார்.

உடனடியாக இதுபற்றி விமான நிலைய அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரையும் கீழே இறக்கி பாதுகாப்பு பகுதியில் தங்க வைக்கப்பட்டனர்.

விமானத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு சரி செய்யப்பட்ட பிறகு விமானம் தாமதமாக இலங்கை புறப்பட்டுச் செல்லும் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

விமானி உரிய நேரத்தில் கோளாறைக் கண்டுபிடித்து விட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இதனால் 150 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

## தயாரிப்பாளர் கைது

அவுஸ்ரேலியாவில் வேலை செய்வதற்கு விஸா பெற்றுத் தருவதாகக் கூறி இலங்கை அகதி ஒருவரை ஏமாற்றிய குற்றச்சாட்டில் தமிழ்ப் படத்தயாரிப்பாளர் ஒருவர் விருக்கம்பாக்கத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இராமநாதபுரத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த வசந்தகுமார் செய்த முறைப்பாட்டை தொடர்ந்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கியூ பிரிவு தகவல்கள் தெரிவித்தன. இந்தப் படத் தயாரிப்பாளரிடமிருந்து எட்டு போலிக் கடவுச் சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படத்தயாரிப்பிற்காக தான் பட்ட கடன் சுமை தாங்க முடியாமலேயே இப்படியான வேலையில் ஈடுபட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இவர் அகோரம் எனும் திரைப்படத்தை தயாரித்துள்ளார். இவரது தம்பியாரும் ஆட்களை ஏமாற்றி பணம் பறிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டார்.

## கூட்டமைப்பின் நடவடிக்கைகளே 13 ஆம் திருத்தத்தை அகற்றத் தூண்டியது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளே 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை அகற்றுவதற்கான தேவையை உருவாக்கியுள்ளதாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம், எதிர்க்கட்சிகள் மற்றும் சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்வது குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கில் இராணுவ முகாம்களை அமைக்கும் பணிகளுக்கு உதவிகளை வழங்க வேண்டாம் என சீனத் தூதரகத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழர் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாக கூட்டமைப்பினர் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்கள் முட்டாள்தனமானவை என பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும், சமாதானம் நிலவும் காலத்திலும் பாதுகாப்பு விவகாரங்களில் தலையீடு செய்யும் அதிகாரமோ உரிமையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளினால் யுத்த ரீதியாக அடைய முடியாத இலக்குகளை அடைவதற்கான களமாக 13 ஆம் திருத்தச் சட்டத்தை சிலர் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் நட்பு நாடுகளுடன் பேணி வரும் உறவுகளில் விரிசலை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வரும் முயற்சிகள் புரிந்து கொள்ளப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புலிகள் சீனர்கள் மீது இரண்டு தடவைகள் தாக்குதல் நடத்தி கொலை செய்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல் செய்திகளைக் கூட வெளியிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேவையற்ற வகையில் இன முரண்பாடுகளைத் தூண்ட முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## நஞ்சாகியது உணவு; மாணவிகள் மயக்கம்

(கண்டி)

உணவு விஷமாகியதால் நோய்வாய்ப்பட்ட தரம் ஐந்தைச் சேர்ந்த மாணவிகள் 8 பேர் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கண்டியிலுள்ள பிரபல மகளிர் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் உட்கொண்ட காலை உணவே விஷமாகியிருப்பதாக வைத்தியசாலையின் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக கண்டிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## போராட்டத்தில் குதிக்க மருத்துவர்கள் முடிவு

நாடளாவிய ரீதியாக பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த பணிநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்வதற்கான அனுமதியை அரச மருத்துவ அதிகாரிகள சங்கத்தின் நிறைவேற்றுக்குழு வழங்கியுள்ளதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் டீ சொய்சா தெரிவித்துள்ளார். அரச மருத்துவ அதிகாரிகள் எதிர் நோக்கும் வேதனப் பிரச்சினையை தீர்ப்பதற்காக உரிய தீர்வு அரசாங்கத்திடம் இல்லை என்பதை தாம் உணர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனை முக்கியமாக முன்னிலைப்படுத்தியே, இந்தப் பணி நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்ததாகவும், அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பணி நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கும் தினம் குறித்த விபரம் நாளை வெளியிடப்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் டீ சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

## மண் சரிவில் சிறுமி பலி

மண் திட்டு சரிந்து வீட்டின் மீது விழுந்ததில் தாய் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டதுடன் 10 வயது மகள் பலியான சம்பவமொன்று அத்தனகல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அத்தனகல, அலவல எனுமிடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தாய் மண் சரிவுகளில் இருந்து காப்பாற்றப்பட்ட போதிலும் அவருடைய 10 வயது மகளை இரண்டு மணி நேரம் தேடியும் கிடைக்கவில்லை என்று அத்தனகல பிரதேச செயலர் தெரிவித்தார்.

## சஜித் கிண்டல்

கிணற்று நீருக்கு வரி அறவிடத் தீர்மானித்திருக்கும் இந்த அரசு, இன்னும் ஓரிரு தினங்களில் தாய்ப்பாலுக்கும் வரி அறிவிடப்போவதாக அறிவிப்பு விடுக்கக்கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹொரண பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.